விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 23 வியாழக்கிழமை (09.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

R A M C O

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நா.-ஐரோ.ஒன்றியம் இணைந்து இலங்கை குறித்து விரிவான திட்டம்!

## கூட்டறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களின் புனர் வாழ்வு, மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கு தேவையான உதவிகளை செய்வதற்காக விரிவானதிட்டம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையும் ஐரோப்பிய ஒன்றியமும் கூட்டாக வரைந்துள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு திரும்பியது விமானம் மலேசிய பயணிகள் திண்டாட்டம்

### வெளிவருகிறது புதிய தகவல்கள்

(கொழும்பு)

இலண்டன் விஜயத்தின் போது எதிர்பாராத விதமாகச் சந்தித்த நெருக்கடிகளை அடுத்து அவசரமாக கொழும்பு புறப்பட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் மலேசியாவுக்குப் புறப்பட்ட விமானம் ஒன்றையே கொழும்புக்குத் திசைதிருப்பி வந்ததாக சிங்கள இணையத்தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குழுவில் இடம்பெற்றிருந்த சிலர் போர்க் குற்றச் சாட்டின் பேரில் இலண்டனில் கைது செய்யப் படலாம் என்ற நிலை உருவாகிய உடனேயே அவர்கள் கொழும்புக்கு விமானம் ஏறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா மீது பாய்கிறது அவுஸ்.

(கொழும்பு)

இரகசிய இராஜாங்கத் தகவல்கள் இணையத்தில் வெளியிடப்பட்டமைக்கு சட்ட ரீதியில் பதில் சொல்ல வேண்டியது விக்கிலீக்ஸ் நிறுவனத்தின் தோற்றுநர் ஜூலியன் அசான்ச் அல்ல அமெரிக்காதான் என அவுஸ்திரேலிய அரசாங்கம் குற்றம்சுமத்தியுள்ளது.

இதற்கு முன்புவரை அவுஸ்திரேலிய அரசாங்கம் (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்திய அரசாங்கம் அழுத்தம் கொடுக்காது

### தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு



(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணப்பட வேண்டியது அவசி யம். அரசாங்கமும் தமிழ்க் கட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வினைக் காண முன்வர வேண்டும். இவ் விடயத்தில் இந்தியா, எவ்வித அழுத்தங்களையும் கொடுக்காது என இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்தார்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சரியான தருணம் இதுவேயாகும். 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலா? அல்லது அதற்கு மேலான வகையிலா தீர்வினைக் காண வேண்டும் (16ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் பறவைக்காய்ச்சல் அபாயம் தடுப்பூசியை ஏற்றுமாறு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் ஏனைய மாவட்டங்களில் பறவைக்காய்ச்சல் (H1N1)நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதால் யாழ்ப்பாணத்திலும் அவதானமாக இருக்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதற்கான தடுப்பூசியை ஒவ்வொரு பிரிவிலும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குச் சென்று எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுகாதார பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

உலகளாவிய ரீதியில் பறவைக்காய்ச்சல் இரண்டாவது முறையாக பரவிவருகிறது. இலங்கையில் ஏனைய மாவட்டங்களில் H1 N1 நோயாளர்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## 'லண்டன் ஆர்ப்பாட்டத்துடன் எவ்வித தொடர்பும் இல்லை'



### விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டுக்கு எதிராக நான் ஒரு போதும்துரோகம் செய்யமாட்டேன். லண்டன் விடயத்தில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள முட்டாள்தனமான நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்பாளியல்ல எனபுதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்மக்கள் மீதான படுகொலையே பிரபாகரன் உருவாகக் காரணமானது

### விநாயகமூர்த்தி எம்.பி. உரை



(கொழும்பு)

பிரபாகரன் ஒன்றும் தானாக உருவாகவில்லை. தமிழ் மக்கள்மீது இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட படுகொலைகளே பிரபாகரனை உருவாக்கியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

குறிப்பாக 1983ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை படுகொலைகள் காரணமாகவே பிரபாகரன் போன்றவர்கள் போராட்டத்தை தேர்ந்தெடுத்தனர் என்று கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் வரவு செலவுத்திட்டம் மீதான நேற்றைய நாடாளுமன்ற (15ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

நடைமுறையிலுள்ள அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றில் நேற்று அங்கீகரிக்கப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு ஆதரவாக 145 வாக்குகளும் அதற்கு எதிராக 15 வாக்குகளும் கிடைத்த நிலையில் 130 பெரும்பான்மை வாக்குகளால் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டது.

ஐக்கிய (15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரச்சினைத் தீர்வுக்கான சந்தர்ப்பத்தை தமிழ்த் தலைமைகள் சரியாக கையாளவில்லை

## அமைச்சர் டக்ளஸ் மன்றில் உரை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு கிடைத்த சந்தர்ப்பங்களை தமிழ் தலைவர்கள் சிலர் பயன்படுத்தியிருந்தால் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் துன்பம் அனுபவித்திருக்க மாட்டார்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் நேற்று கூறியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பாதுகாப்புத் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

நான் சொல்லும் கருத்துக்கள் தனி நபர் கருத்துக்களோ,தனி ஒரு குழுவின் கருத்துக்களோ அன்றி தனி ஒரு கட்சிசார்ந்த கருத்துக்களோ அல்ல இவைகள் மனித குலம் சார்ந்த கருத்துக்கள்.

ஒரு மக்கள் சமூகத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தும் கருத்துக்கள். மனித நாகரிகத்தை விரும்பும் எந்தத் தரப்பாலும் ஏற்க முடிந்த கருத்துக்கள்.

நான் இங்கு பேசும் கருத்துக்கள் நீண்ட நெடிய வரலாற்று அனுபவங்களைக் கொண்டவை. சுமார் 15 வருடகால ஆயுதப் போராட்ட அனுபவங்களையும் 20 வருடங்களுக்கு மேலான ஜனநாயக வழிமுறையிலான அனுபவங்களையும் கொண்டவை என் கருத்துக்கள்.

எமது மக்கள் முப்பதாண்டு காலப் போருக்குப் பின்னர் இப்போதுதான் சற்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள். இப்பொழுதுதான் இந்த மக்களுக்கு ஒரு புதிய உலகத்தின் அனுபவம் கிடைத்துள்ளது.

குறிப்பாக வன்னியிலிருக்கும் இளைஞர்கள் உலக ஓட்டத்திலுள்ள பல விடயங்களை இப்பொழுது தான் அறிகிறார்கள். ஆனால் இதற்கிடையில் இந்த நல்ல நிலைமையைப் பாழாக்குவதற்குச் சில சக்திகள் முயற்சிக்கின்றன. இது கண்டிக்கப்பட வேண்டியது.

தீர்வுத் திட்டத்தை பற்றிப்பேசிக் கொண்டு அதற்கு எதிராக பிரச்சினைகளை உருவாக்கும் இந்த நடவடிக்கைளை யாரும் அனுமதிக்க முடியாது.

உரிமைகளைப் பெறுவதற்கான வழி என்பது அழிவு யுத்தமல்ல. இதை நாம் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் இருந்து இறுதிவரை உறுதியாக தெரிவித்து வந்திருக்கின்றோம். அழிவு யுத்தத்தால் எது நடக்கும் என்று நம் தெரிவித்திருந்தோமோ அதுவே இங்கு நடந்து முடிந்திருக்கிறது. எது நடக்கப் போகின்றது என்று நாம் தீர்க்க தரிசனமாக தெரிவித்திருந்தோமோ அதுவே இங்கு நடந்து கொண்டும் இருக்கின்றது.

எது நடக்கப்போகின்றது என்று நம்பிக்கை தெரிவித்திருந்தோமோ அதுவே இங்கு நடக்கவும் போகின்றது. ஆகவே நாம் அதிக விலை செலுத்தி வாங்கிய அமைதியானதும், அச்சமற்றதுமான இந்த சூழலை எமது அரசியல் உரிமைகளைய நடைமுறைச் சாத்தியமான வழி முறையில் நின்று பெற்றுக் கொள்வதற்கும் சரிவர பயன்படுத்த வேண்டும்.

எஞ்சியுள்ள மக்களையும் மீளக் குடியமர்த்துதல் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த பிரதேசங்களை மக்கள் குடியிருப்பு நிலங்களாக மாற்றுதல், மீளக் குடியேறிய மக்களுக்கான வாழ்வாதார வசதிகளை உருவாக்கிக் கொடுத்தல். இவைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தி அதை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளது போன்று மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை உரிய முறையில் சகலருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆரம்பமாகக் கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சக வாழ்வும், சம உரிமையும் சுவுய அரசியல் சூழலை நாம் உருவாக்குவதற்காக உழைக்க வேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே! கடந்தகால அழிவு யுத்த சூழலில் வெறும் வன்முறைகளை மட்டுமே கண்டும் கேட்டும் வந்திருந்த எமது மக்கள் முழுமையான ஒரு ஜனநாயக சூழலுக்குள் வாழ்வதற்கான வழிகளை நாம் விரைவாக தேட வேண்டும்.

எமது மக்கள் சமூகத்தை முழுமையான ஒரு ஜனநாயக மயப் படுத்தப்பட்ட சமூகமாக மாற்றியமைக்க வேண்டும். அதற்கு அரசாங்கத்தின் முயற்சிகள் மட்டுமன்றி தமிழ்த் தலைமைகளின் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது. ஆகவே துரதிர்ஷ்டவசமாக சில தமிழ்த் தலைமைகள் செய்த தவறுகளுக்காக அப்பாவித் தமிழ் மக்களே கடந்த காலங்களில் அழிவுகளைச் சந்தித்திருக்க வேண்டிய துயரங்கள் இங்கு நடந்து முடிந்திருக்கின்றன. இனியும் அந்தத் தவறுகள் இங்கு நடக்காது என்றே நான் நம்புகின்றேன்.

நடந்தவைகள் நடந்தவை களாகவே இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லதாக இருக்க வேண்டும் என்பதற்காக நல்லெண்ண சமிக்ஞையோடு வருபவர்கள் யாராக இருப்பினும் அவர்களை வரவேற்க வேண்டும்.

அண்மையில் லண்டனுக்கு ஜனாதிபதி அவர்கள் சென்றிருந்த போது புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் சில அங்குள்ள மக்களை ஆர்ப்பாட்டங்களை நடத்த தூண்டி விட்டிருக்கின்றன.

கடந்த காலங்களைப்போல் புலம்பெயர் மக்களை உணர்ச்சியூட்டும் விதமாக பிரசாரங்கள் அங்கே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்து வருகிறது. அது மட்டுமல்ல; விடுவிக்கப்படும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கி அவர்களை சமூகவாழ்வில் இணைத்துவருகிறது.

இது ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கை ஆகும். இந்த நடவடிக்கையில் ஏறக்குறைய 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். நாங்கள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சொன்னவை இன்று நிஜமாகி வருகின்றன.

நாங்கள் சொன்னதை எல்லாம் அன்று நம்பிக்கையீனமாகப் பார்த்தவர்களும் கேலி பேசியவர்களும் இன்று உண்மைகளைப் புரிந்துள்ளனர்.

நடந்தவை நடந்தவைய்யாக இருக்கட்டும். நடக்கப் போபவை நல்லதாக நடக்கட்டும்.நல்லவை நடக்கும் என்று நம்புகின்றேன் (ச)


## வேலைக்கு ஆள் தேவை

புத்தகம், ஸ்ரேசனரி வியாபாரத்தில் முன் அனுபவமுள்ளவர்கள் அல்லது வேலை பழக விரும்புபவர்கள் தேவை.

மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத் தக்கது. தகுதியுடையோர் உடன் நேரில் வரவும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (சி-1757)


## பனை அபிவிருத்திச் சபையின் அறிவுறுத்தல்

பனைசார் உணவு உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்களுக்கு பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. பசுபதி சீவரத்தினம் அவர்களால் விதிக்கப்படும் அறிவுறுத்தல்.

பனையிலிருந்து பெறப்படும் பதனீர், பனங்களி, பனங்கிழங்கு என்பவற்றை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடுவோர் சபையில், உற்பத்திப் பொருளுக்கான தரச் சான்றிதழ் பெற்று உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும். இச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் உற்பத்தியை மேற்கொள்வோர் மீது சபை சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கும் என அறிவுறுத்தப்படுகிறது.

தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டிடம்,
கண்டி வீதி. (சி-1766)

தலைவர்,
பனை அபிவிருத்திச்சபை,
யாழ்ப்பாணம்.




## க.பொ.த (உ/த) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

**யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

**கணிதம்**

பா.நீதுஜன் 2ஏ,பி, எஸ்.பிரணவன் ஏ,2பி, கே.கோகுலன் 2பி,சி, ஜி.பிருந்தா 2பி,சி, எஸ்.நிசாந்தினி 2சி,எஸ்

**உயிரியல்**

எஸ்.யதுகுலன் பி,2சி, வை.கார்த்திகா 2சி,எஸ்

**வர்த்தகம்**

எஸ்.ஜெயசாந்தன் பி,2சி, எஸ்.தர்மிலன் பி,2சி, எஸ்.துஜிதா பி,சி,எஸ்,

**கலை**

எம்.நிலாணி 2ஏ,பி, எஸ்.துவாரகன் 2ஏ,பி, ஆர்.சங்கீதா 2ஏ,பி, எஸ்.தீபிகா 2ஏ,பி, ஆர்.கௌதமி ஏ,பி,சி, வி.பிரியங்கா ஏ,பி,சி, எஸ்.சுவேதா ஏ,பி,சி, எஸ்.கஜந்தினி ஏ,பி,சி, ஏ.தனுஜா ஏ,பி,சி, ஜே.பிரசன்னா ஏ,பி,சி, ஆர்.ஞானபரன் ஏ,2சி, எஸ்.ஜெயரூபன் ஏ,2சி, எஸ்.ரஜிமலா ஏ,2சி, எவ்.பிரான்சிஸ் சேவியர் 3பி, எஸ்.தர்மிலா 3பி, எஸ்.ரோபிதா 3பி, ஆர்.சிறிவாணி 3பி, பி.யதுாசன் 3பி, எம்.சுகன்யா 3பி,

**யா/இடைக்காடு மகாவித்தியாலயம்**

**கணிதப்பிரிவு**

சி.தவனீஸ் 2ஏ,பி, சி.கஸ்தூரி 3சி, வ.நிருசா பி,சி,எஸ், க.சாரூபன் 2சி,எஸ்

**உயிரியல்**

ரி.சுமைதினி பி,2எஸ்

**கலை**

க.ஜனா 2ஏ,பி, அ.காயத்திரி ஏ,2பி, பி.பத்மரதி ஏ,2பி, கு.நிரோசா 2ஏ,சி, து.சாரூகா ஏ,பி,சி

**யாழ்ப்பாணக் கல்லூரி**

3ஏ

**கணிதம்**

பகீரதன் தர்சன் ,

**கலை**

இராசநாயகம் அனுயா (மா.நி. 02),பரமநாதன் திலக்சனா, ரகுநாதன் துஷ்யந்தி

## மரண அறிவித்தல்கள்

### துரைசிங்கம் பரமேஸ்வரி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பரமேஸ்வரி 07.12.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மகளும் துரைசிங்கத்தின் அன்பு மனைவியும் சுரேஸ்கரன், சசிகரன், கஜேந்திரன், காண்டீபன், கஜேந்தினி, சுபாஸ்கரன், தர்மினி ஆகியோரின் அன்புத் தாயாரும்

கலைச்செல்வி, தேவராணி, சரோஜினி, ஜெகபாலன், சிவகுமார் ஆகியோரின் மாமியாரும் சரவணன், கீர்த்தனன், கானுகன்,கவித்தன், கிரிஷிகன், பிரவீன், சுமித்திரன், நிக்ஸன், கீத்திகன், சாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை 09.12.2010 அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குட்செட் றோட்
1-ம் ஒழுங்கை
கோண்டாவில் (3215)

தகவல்
குடும்பத்தினர்

### திருமதி வேலாயுதம் இராஜேஸ்வரி

பருத்தித்துறை, ஐயனார் வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குழந்தைவேலு சோதிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் விஸ்வலிங்கம் வேலாயுதத்தின் (M.L.T.RTD) அன்பு மனைவியும் அம்பலவாணபிள்ளை, இராசபாக்கியம் ஆகியோரின் சகோதரியும் ஆகிய இராஜேஸ்வரி வேலாயுதம் 08.12.2010 இறைபதம் அடைந்தார்.

அன்னார் கிருஷ்ணகுமாரி(சுவிஸ்), இந்துமதி (பருத்தித்துறை), ரதி(திருகோணமலை), ஜெயந்தி (பருத்தித்துறை), வசந்தி(முல்லைத்தீவு), சாந்தகுமாரி(நோர்வே), லலிதாகுமாரி(கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும் சண்முகநாதன், சந்தியாப்பிள்ளை, லோகநாதன், ஆனந்தராஜா, மகேந்திரன், ஜெயமோகன், முருகேஸ்குமார் ஆகியோரின் மாமியாரும் சுபோதினி, குகதாசன், சுதர்சினி, புஸ்பகாந்தி, சிறிகாந், தேனுகாந்தி, நீலவண்ணன், ரகுராமன், அபிராமன், தாமரைச்செல்வி, சாருண், அகிலன், லோஜினி, செந்தூரன் ஆகியோரின் பேர்த்தியும்

மணிமாறன், மணிபரன், சுவேத்தா, சரண், சுதானந், அர்வின், லவண், ரங்கணா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.12.2010 அன்று சுப்பர்மடம் மயானத்தில் நடந்தேறியது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.
T.P : 021 226 3475 (சி-1769)

தகவல்
பா.சந்தியாப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நிதானம்

இன்றைக்கு உலகம் மிகவும் பரபரப்பாகப் போய்க் கொண்டிருக்கிறது. பொறுமையைச் சோதிப்பது போன்று பல சம்பவங்கள் நடந்தேறுகின்றன.

அவற்றையெல்லாம் சந்தித்தே தீரவேண்டியிருக்கிறது. அலுவலகத்திலோ, வீட்டிலோ நீங்கள் நிதானமாகப் பொறுமையாக நடந்துகொள்ளத் தெரியவில்லையானால் உங்களுக்கு 'சிடுமூஞ்சி', 'முசுடு' போன்றெல்லாம் பெயர் வைத்துவிடுவார்கள்.

சரி, வாழ்க்கையில் பொறுமைசாலி என்று பெயர் வாங்குவது எப்படி?

முதலாவது– நீங்கள் நினைப்பது, எதிர்பார்ப்பது, செய்வது எல்லாம் நூறுசதவீதம் சரியாக நடக்கவேண்டுமென்று ஆசைப்படக்கூடாது.

எதுவாக இருந்தாலும் அதில் ஓரளவுக்கு தவறு நடக்கலாம் என்பதை எதிர்பாத்திருங்கள். ஓரளவுக்கு அதை அனுமதியுங்கள்.

ஒரு நண்பரை 6 மணிக்கு ஒரு இடத்துக்கு வரச் சொல்லியிருக்கிறீர்கள். ஆறுமணிக்கு அவர் வரவில்லை.... உடனே பொறுமை இழக்க ஆரம்பிக்கக் கூடாது. பத்து நிமிடம் தாமதமாகலாம். அவர் வரும் வழியில் பஸ் ஏதாவது நெரிசலில் மாட்டியிருக்கலாம். அதையெல்லாம் எதிர்பார்த்து கொஞ்ச நேரம் காத்திருப்பது தவறில்லை.

சில நெருக்கடியான சூழ்நிலைகளை தமாஷாக எடுத்துக் கொள்ளப்பழக வேண்டும்.

சில இடங்களுக்குப் போகும்பொழுது காத்திருப்பதற்கு நமது மனதைத் தயார்செய்து கொண்டே போக வேண்டும்.

ஒரு ரயிலுக்கோ, பஸ்ஸுக்கோ, அல்லது விமானத்துக்கோ, கப்பல் பிரயாணத்துக்கோ போகும் போது அங்கே போய் நீங்கள் மணிக்கணக்கில் கூட காத்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். புறப்படும் நேரம் கூட மாறலாம். நீங்கள் போய் சேர்ந்ததும் அது உடனே புறப்பட வேண்டும் என்று கட்டாயமா என்ன?

அப்படியான சமயங்களில் படிப்பதற்கு சில சுவாரஸ்யமான புத்தகங்களை கையில் எடுத்துக் கொள்ளுங்கள்.

உங்களைச் சுற்றி எவ்வளவோ சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்து கொண்டிருக்குமல்லவா..... அதையெல்லாம் வேடிக்கை பாருங்கள்.

எதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோமோ அந்தக் காரியத்தில் உண்மையாகவே ஒரு அக்கறையிருந்தால் நமக்கு போரடிக் காது.

சில கோயில்களில் தரிசனத்துக்காக பக்தர்கள் நாட்கணக்கில் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களெல்லாம் அலுத்துக் கொள்வதில்லை.

ஆண்டவனை தரிசிக்க வேண்டும் என்ற உண்மையான அக்கறை இருப்பதால் அவர்களுக்கு போரடிக்காது.

சில சினிமா கியூ கூட அப்படித்தான்! மாலை ஆறுமணிக் காட்சிக்கு காலையில் ஆறுமணிக்கே நிற்பதில்லையா? இன்னொரு முக்கியமான விடயத்தை நாம் பழக்கப்படுத்தியாக வேண்டும். Live for the moment என்கிறார்கள் நிபுணர்கள்.

பலர் எப்பவும் அடுத்ததாக நடக்கப்போகும் விடயத்திலேயே கவனமாக இருப்பார்கள். அந்த எண்ணத்திலேயே இந்த நிமிடத்தை பொறுமையில்லாமல் கழிப்பார்கள்.

ஒருவர் இருக்கிறார் அவர் எப்படியென்றால் அலுவலகம் முடிவதற்கு முன்னரே ''சேர்.... சேர்.... 5 மணிக்கெல்லாம் ரெடியாக இருங்க நாம் அந்த ஹோட்டலியே போய் காலை உணவு சாப்பிட வேண்டும்'' என்று 4 மணியிலிருந்து சொல்லிக் கொண்டிருப்பார். 4.55 மணிக்கே பரபரப்பாக வருவார். இரண்டு பேரும் புறப்படுவோம். சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போதே "சேர், சாப்பிட்டு முடிந்ததும் நேராக ஓர் ஜவுளிக்கடைக்கு போறோம்!'' எனக்கூறி பரபரப்பாக சாப்பிட்டு புறப்படுவார்.

ஜவுளிக்கடையில் அவசர அவசரமாக ''விரைவில் பில் எழுதுங்கள் சேர்! சினிமாவுக்கு நேரம் ஆகிறது'' எனக் கூறுவார்.

சினிமா திரையரங்கில் அமர்ந்துகொண்டு அடுத்து எங்கே இரவுச் சாப்பாடு சாப்பிடலாம் என யோசித்துக் கொண்டிருப்பார்.

இரவுப்படுக்கையில் இருந்து கொண்டும் நாளை காலையில் எழும்பியதும் அதைச் செய்ய வேண்டும். இதைச் செய்ய வேண்டும் என திட்டம் போட்டுக் கொண்டிருப்பார்.

எப்பவுமே அடுத்த நிமிஷம், அடுத்த நாள், அடுத்த வாரம், அடுத்த வருடம்... இதுதான் அவருடைய சிந்தனை.

இந்தநிமிட மகிழ்ச்சியை அவர் இழந்துவிட்டார். அதனால் வாழ்நாள் முழுவதும் பொறுமை இன்மை அவஸ்தை அல்லல்!

அதனால் நாம் எல்லோரும் வாழ்க்கையில் நிதானமாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். அதற்காக இந்த நிதானத்திற்கு வேறுவிதமாக அர்த்தம் நினைக்கக் கூடாது.

ஒரு தடவை ஒருவருடைய குதிரை காணாமல் போய்விட்டது. அதற்காக அவர் கவலைப்படாது நிம்மதியாக சந்தோசமாக இருந்தார்.

"என்ன சேர் இது.... உங்கள் குதிரை திருட்டுப் போயிருந்தும் நீங்கள் கவலைப்படாமல் இருக்கிறீர்களே!....'' எனக் கேட்டார்களாம். அதற்கு அவர், ''நல்ல வேளை சேர் கட்டியிருந்த குதிரை காணாமல் போய்விட்டது. நான் அதன் மேல் உட்கார்ந்திருக்கும் போது திருட்டுப் போயிருந்தால் நானும் சேர்ந்து காணாமல் போயிருப்பேன்!'' என்று சொன்னாராம்! நிதானம் தவறாத மனிதன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் முற்றாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் பல மாவட்டங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துவரும் வேளை யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் முற்றாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் யாழ்.மாவட்ட செயலகத்தில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழைகாரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கழிவு நீரோடு வாய்க்கால்களில் ஏற்பட்டுள்ள தடையால் அசுத்த நீர் ஆங்காங்கே தேங்கி நிற்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனால் நுளம்புகள் பெருகக் கூடிய சாத்தியக் கூறுகள் ஏற் பட்டுள்ளது.

மேலும் இயற்கையாக நீர் வழிந்தோடக் கூடிய வகையில் வாய்க்கால்களை சுத்தம் செய்ய மாநகரசபையினரும், பிரதேச சபையினரும் மற்றும் பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில்தான் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

இதேவேளை தொடர்ந்தும் மழை பெய்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை மேலும் பாதிக்கும் நிலை ஏற்படும். இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையை அனைவரும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2-6)

## சிங்கள பாட கற்கை நெறி இடைநிறுத்தம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தேசிய கல்வியியல் நிறுவகத்தின் சிங்களப்பாடக்கற்கை நெறி க.பொ.த.(சா/த) பரீட்சையை முன்னிட்டு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறி எதிர்வரும் 27,28 ஆம் திகதிகளில் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் மின்விநியோகம் தடைப்பட் டிருக்கும் என இலங்கை மின்சாரசபையின் யாழ்.பிரதேச அலுவலக மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்றும் நாளையும் சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பிரதேசங்களிலும் நாளை மறுதினம் சனிக்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களிலும் எதிர்வரும் 12,13,15 ஆம் திகதிகளில் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயம் ஆகிய பிரதேசங்களிலும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலி, பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதிகளிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். இருப்பினும் வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பு மின்சாரம் வழங்கப்படும் எனவும் இம்மின்தடையால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களிற்கு மனம் வருந்துவதாகவும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (ஸ்ரீ-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 180 | 120 |
| உருளைக்கிழங்கு | 60-70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 100 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 50 | 50 |
| கோவா | 60 | 80 | 60 |
| கரட் | 60 | 100 | 70 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | - | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 160 | 130 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 140 |
| பாகற்காய் | - | 200 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 40 |
| பயற்றங்காய் | 180 | 140 | 130 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | - | 80 | 70 |
| கறிமிளகாய் | - | 200 | 150 |
| முருங்கைக்காய் | 240 | 250 | 270 |
| போஞ்சி | 120 | 160 | 90 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 60 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 45 |

# இராசி பலன்

*09.12.2010*
*(கார்த்திகை 23, வியாழக்கிழமை)*
*சதுர்த்தி பின்னிரவு 1.01 மணி வரை*
*உத்தராடம் முன்னிரவு 10.18 மணி வரை*
*இராகுகாலம் 1.48-3.18 மணி வரை*
*சுபநேரம் 7.48-9.18 மணி வரை*
*சதுர்த்தி விரதம்.*

**மேடம்** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி காண்பீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்களை வகுப்பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**இடபம்** தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறும், பிரயாணத்தின் மூலம் நன்மையடைவீர்கள், சொத்துக்கள் வாங்குவதில் இருந்த தடைகள் விலகும், கட்டுப்பாடான நிலை.

**மிதுனம்** எந்தக் காரியத்திலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது, தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் அனுகூலம் ஏற்படும், வேலைச்சுமை அதிகரிக்கும்.

**கடகம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நீண்டநாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு கிட்டும், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**சிங்கம்** தொழில் சம்பந்தமாக சில முக்கிய முடிவெடுப்பீர்கள், மறைமுக எதிர்ப்புகள் குறைவடையும், பெண்களால் பெருமை வந்து சேரும் நாள், புத்துணர்வோடு செயற்படுவீர்கள்.

**கன்னி** கடிதம் கனிந்த தகவலைத்தரும், தொழில் முன்னேற்றம் உருவாகும், வருமானம் திருப்தி தரும், பிள்ளைகளால் பெருமைப்படும் நிலையுண்டு, மனநிறைவு கூடும் நாள்.

**துலாம்** சுபசெலவுகள் அதிகரிக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழிலில் ஆர்வம் கூடும், சுப செய்திகள் வந்து சேரும், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**விருச்சிகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, சேமிப்பு ஊக்குவிப்பதற்கான வழியைக் கையாழ்வீர்கள், உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

**தனுசு** நாவன்மையால் நற்பெயர் கிடைக்கும் நாள், உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மகரம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பெரிய மனிதரின் ஒத்துழைப்பால் வியப்படையும் செயலொன்றைச் செய்து முடிப்பீர்கள், சிந்தனை மிகுதியுண்டு.

**கும்பம்** மாலைநேரப் பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்புண்டு, ஓய்வில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், வெளியுலகத் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மீனம்** உற்சாகமான நாள், பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த கருமங்கள் நிறைவேறும், பண வரவு அதிகரிக்கும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சிப் பிரதேச தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு யுனிசெப் நிதியுதவியுடன் வாழ்வாதார திட்ட உதவி வழங்கும் வைபவத்தில் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு உத்தியோகத்தர் திருமதி தீபா கௌரீசன் உரையாற்றுவதனையும் சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ்.வரதபாஸ்கரலிங்கம், உதவித்திட்டப் பணிப்பாளர் திருமதி ஆர்.இரகுநாதன், யுனிசெப் திட்ட உத்தியோகத்தர் தி.நேசன், பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் பாராளுமன்ற உறுப்பினர் பயனாளிக்கு துவிச்சக்கரவண்டியையும் பிரதேச செயலர் தையல் இயந்திரத்தினையும் வழங்குவதனையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# உலக விஞ்ஞான தின சித்திர போட்டிக்கு தெரிவானோர் விபரம்

(அல்வாய்)

உலக விஞ்ஞான தினத்தையொட்டி தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் பாடசாலை மாணவர்களுக் கான சித்திரப் போட்டி நடாத்தப்பட்டது. இப் போட்டிக்கு யாழ். மாவட்டப் பாடசாலைகளிலி ருந்து அனுப்பப்பட்ட ஆக்கங்களில் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள ஆக்கங்களை அனுப்பிய மாணவர்களின் விபரம் வரு மாறு;

*தரம் 6*

ஸ்ரீறஜன் சுஜந்தன் (யா/ பரு.சித்தி விநாயகர் வித்தியாலயம்)

*தரம் 7*

கே.கீர்த்தனன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), நி.பெ.அ. யஸ்மினி(யா/ மணற்காடு றோ. க.த.பாடசாலை), சங்கீர்த்தனாமோகன் (யா/ வட மத்திய பெண்கள் கல்லூரி), லோகேஸ் வரன் சுபேந்திரன் (யா/ கெருடாவில் இந்து த.க.பாடசாலை)

*தரம் 8*

யோகேஸ்வரன் சபேந்திரன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), சற்குணவேல் ஸ்ரீரதன் (யா/ ஹாட்லிக் கல்லூரி)

*தரம் 9*

மரியசெல்வம் சுஜிவன் (யா/ மணற்காடு றோ.க.த. செல்வானந்தன் இனியவன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), ஸ்ரீகாந் கௌசிகன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), செல்வராசா தர்சன் (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

*தரம் 10*

சுரேஸ் சுலக்ஷன் (யா/ ஹாட்லிக் கல் லூரி), கலைச்செல்வன் பிறவணன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), பஞ்சவர்ணம் கௌதம் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), இராசேந்திரம் தபோசன் (யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), செல்வானந்தன் ஹரிறதன் (யா/ஹாட்லிக் கல்லூரி)

மேற்படி மாணவர்கள் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெற வுள்ள விஞ்ஞான தின இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. (ஸ்ரீ-3-19)

# சட்டவிரோதமாக மணல் கடத்திய சந்தேக நபர்களுக்கு அபராதம்

(கரவெட்டி)

சட்ட விரோதமான முறையில் இரு லொறிகளில் மணலை கடத்திய ஆறு சந்தேக நபர்களை சாவகச்சேரி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சம்பவ தினம் ஆறு சந்தேக நபர்களும் இரு லொறிகளைப் பயன்படுத்தி அனுமதிப் பத்திரம் இல்லாமல் மணலை ஏற்றிச் சென்ற வேளை சாவகச்சேரி பொலிஸாரி னால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் இரு பிரிவுகளாக தொடரப்பட்ட வழக்கில் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி என்.எம். எம்.அப்துல்லா முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர்ப் படுத்தப்பட்டனர்.

முதல் மூன்று சந்தேக நபர்களும் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் முதலாவது சந்தேக நபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதமும் அடுத்த இரு சந்தேக நபர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராத மும் விதிக்கப்பட்டது.

அடுத்த வழக்கில் 3 சந்தேக நபர்களுக் கும் இதேபோன்று அபராதம் செலுத்து மாறும் நீதவான் உத்தரவிட்டதுடன் இரு வாகனங்களுக்கும் தலா 5 இலட்சம் பிணை முறியில் வாகனங்களை எடுத்துச் செல்ல நீதவான் உத்தரவிட்டுத் தீர்ப்பளித் தார். (ஸ்ரீ-3-24)

# உலக விஞ்ஞான தினம்

(அல்வாய்)

உலக விஞ்ஞான தினம் யா/ வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை விதாதா வள நிலையத் தலைவர் ரி.ஜெரோம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொண்டு வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தேசிய விஞ்ஞான மன்றத் தலைவர் பேராசிரியர் சிறீமலி பெர்னாண்டோ, தேசிய விஞ்ஞான மன்றத்தின் இயக்குநர் கலாநிதி சரத் அபய வர்த்தனவும் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். செயலக பிரதம கணக்காளர் எஸ்.சண்முகரட்ணம், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் நன்றியுரையை தேசிய விஞ்ஞான மன்றத்தின் இணைப்பாளர் சுனேகா கருணாசேன நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-3-19)

# பருத்தித்துறை பிரதேசசபையினால் தென்னிங்கவத்தை வீதி புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி மேற்கில் 50 வருடங்களாக புனரமைக்கப்படாமல் முற்றாக அழிந்து போன தென்னிங்கவத்தை வீதி தற்போது மீள்புனரமைக்கபட்டு வருகிறது.

இதற்கான நடவடிக்கைகளை பருத்தித் துறை பிரதேச சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வீதி புனரமைப்பு செய்யப்படுவதை அடுத்து அப்பகுதி மக்கள் பருத்தித்துறை பிரதேச சபையினருக்கு நன்றியை தெரிவித் துக்கொள்கின்றனர். (ஸ்ரீ-3-10)

# வல்லைப் பாலத்தடியில் மாலைநேர மீன்வியாபாரம்

வல்லைப் பாலத்தடியில் மாலைநேர மீன்வியாபாரம் தற்போது நடைபெற்று வரு கிறது.

கடந்த சில தினங்களாக பெய்த கடும் மழையினால் வல்லைக் கடல் நீர் மட்டம் உயர்ந்துள்ளதை அடுத்து அக் கடலில் மீன்பிடிக்கப்படுகிறது.

அவ்வீதியால் மோட்டார் சைக்கிளில் செல்வோர் மீன்களை வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. (ஸ்ரீ-3-10)

# மலசலகூட வசதியை ஏற்படுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

புத்தூர் சந்தைப் பகுதியில் நீண்டகால மாக மலசலகூடம் இல்லாத குறை காணப் படுகிறது.

இப்பகுதியில் மீன்சந்தை, இறைச் சிக்கடை, மரக்கறிச் சந்தை மற்றும் கடைகள் இருப்பதுடன் நாளொன்றுக்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட நுகர்வோர் வருகை தருகின்றமை குறிப்பிடததக்கது.

எனவே உரியதரப்பினர் இச் சந்தைப் பகுதிக்கு விரைவில் மலசலகூடம் ஒன்றை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-10)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஒரு வருட டிப்ளோமா கற்கைநெறி நாளை மறுதினம் சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.




தென்மராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் கு.பிறேமகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் பிரதம விருந் தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச் சின் செயலாளர் எல்.இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பயிற்சி பெற விரும்பும் முன்பள்ளி ஆசிரி யர்களை தம்முடன் தொடர்புகொள்ளுமாறு வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா அறி வித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# ஏ-9 வீதியின் இருமருங்கிலுமுள்ள மரங்களை அகற்றுமாறு உத்தரவு

(கரவெட்டி)

சாவகச்சேரி பிரதேசத்திற்குட்பட்ட ஏ9 வீதியில் உள்ள இருபக்கமரங்களையும் உடனடியாக அப்புறப்படுத்துமாறு சாவகச் சேரி நீதிமன்றம் பிரதேசசபைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஏ9 வீதியில் காணப்படும் மேற்படி மரங்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளதோடு வீதி விபத்துக்களும் அதிகம் இடம் பெறுகின்றன.

பொதுமக்கள்கொடுத்தமுறைப்பாட்டை அடுத்து சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் என்.எம்.எம்.அப்துல்லா மேற்படி உத்தர வைப் பிறப்பித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி உறுப்பினர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கை தொடர்பில் எவ்வித முறைப்பாடும் முன்வைக்கப்படவில்லை

## அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு



(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட, புனர்வாழ்வளிக்கப்படும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களில் எவருமோ அல்லது அவர்களது பெற்றோரோ புனர்வாழ்வளிப்பவர்கள் பற்றி இதுவரை எந்தவொரு முறைப்பாடும் செய்யாததிலிருந்தே புனர்வாழ்வு நடவடிக்கைகள் சரியாக நடைபெறுவது தெளிவாவதாக சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் பேசும்போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், சரத் பொன்சேகா விடயத்தை பொறுத்த வரையில் சிறையிலுள்ள சகல கைதிகளும் சமமாக நடத்தப்பட வேண்டும். அதைத் தவிர விசேடமாக ஏதேனும் நீதிமன்ற உத்தரவு இருந்தாலோ அல்லது வைத்தியர்களின் ஆலோசனை இருந்தாலோ அதை எம்மால் நிறைவேற்ற முடியும்.

27ஆயிரம் பேர் கைதிகளாக இருக்கும் நிலையில் அனைவரையும் சமமாக நடத்த வேண்டியது அவசியம். இதேநேரம், நவம்பர் மாதம் முதலாம் திகதி வரை முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் 5ஆயிரத்து 400 பேர் வரை புனர்வாழ்வளித்து விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். எஞ்சியவர்கள் விடுதலைப்புலிகளுடன் வைத்திருந் தொடர்பு மற்றும் அதன் ஆழத்தின் அடிப்படையிலேயே அவர்களது விடுதலை தங்கியிருக்கிறது.

விசாரணை செய்யவேண்டியவர்கள் அல்லது நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த வேண்டியவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் அனைவரும் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் அதுதான் அரசின் கொள்கை.

11ஆயிரத்து 691 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களில் எவருமோ அல்லது அவர்களது பெற்றோரோ புனர்வாழ்வளிப்பவர்கள் பற்றி எந்தவொரு முறைப்பாடு இதுவரை செய்யவில்லை. இதிலிருந்தே புனர்வாழ்வு நடவடிக்கைகள் சரியாக நடைபெறுகின்றன என்பது புலனாகிறது என்றார். (ஸ்ரீ-2)

# பொன்சேகாவை சிறையில் வைத்திருப்பதே மிகப் பெரிய காட்டிக் கொடுப்பாகும்

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலைக்குக் காரணமாக இருந்த புலிகளின் முக்கியஸ்தரான கே.பி.யை பாதுகாப்புடன் பயங்கரவாதத்தை விரட்டியடித்த பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்திருப்பதே மிகப் பெரிய காட்டிக் கொடுப்பாகும் என்று எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் காலை ஏற்பட்ட சர்ச்சையின் போது அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் சவாலுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கைப் படையினரை ஒரு[illegible] சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல முடியாது என்ற நிலைப் பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். அத்துடன் கரு ஜெயசூரிய யுத்தக் குற்றங்கள் பற்றி எதுவுமே கூறியிருக்கவில்லை. நாம் படையினரை காட்டிக்கொடுக்க தயாராக இல்லை.

எனினும் ராஜீவ்காந்தியின் கொலைக்குக் காரணமாக இருந்த கே.பியை பாதுகாத்துக் கொண்டு பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்டுக் கொடுத்த சரத் பொன்சேகாவை சிறையில் வைத்திருப்பதே மிகப் பெரிய காட்டிக் கொடுப்பு என்றார். (ஸ்ரீ-2)

# இணையத்தளத்தின் எதிர்கால இதயமாக சீனா திகழ்கின்றது

## கூகுள் நிறுவனம் கருத்து

(பீஜிங்)

இணையத்தளத்தின் எதிர்கால இதயம் சீனா. தேடுதல் தவிர வரைபடம் மற்றும் விளம்பரம் போன்ற பிற பகுதிகளும் சீனாவில் "கூகுள்" வளர்ச்சி பெறுவதற்கான இடங்களாக திகழ்கின்றன என "கூகுள்" நிறுவனம் கூறியுள்ளது.

கடந்த 2006 இல் "கூகுள்" நிறுவனம் தேடு பொறியை சீனாவில் நிறுவியது. மிகக் குறுகிய காலத்திலேயே கோடிக்கணக்கான வாடிக்கையாளர்களை தன் பக்கம் ஈர்த்தது. இந்நிலையில், "தியான் மென்ட்" சதுக்கப் படுகொலை போன்ற கடந்த சீன அரசின் அட்டூழியங்களைக் குறிக்கும் தகவல்ளை தணிக்கை செய்ய வேண்டுமென சீன அரசு உத்தரவிட்டது.

அதை ஏற்ற "கூகுள்" சில விடயங்களை தணிக்கை செய்தது. ஆனால் சீனா தொடர்ந்து "கூகுளுக்கு" நெருக்கடி கொடுத்து வந்தது.

இதற்கிடையில் அந் நிறுவனத்தில் ஈமெயில்கள் சில இணையத்தள் திருடர்களால் திருடப்பட்டன. சீனா இதுகுறித்து விசாரிப்பதாக கூறிவந்ததேயொழிய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இப்பிரச்சினை ஒருநிலையில் முற்றி கடந்த மார்ச் முதல் சீனாவில் தனது தேடு பொறியை நிறுத்திவிட்டது கூகுள்.

அதையடுத்து கூகுளின் தேடுபொறி, ஹொங்கொங்கில் இருந்தபடி செயற்பட ஆரம்பித்தது.

இதனால் அந் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் பெரும்பகுதியை சீன தேடு பொறிநிறுவனமான "பெய்டு" விடம் இழந்தது. அதன் பின் கடந்த யூலையில், ஹொங்கொங்கிற்கு சேவையை திருப்பிவிடுவதை "கூகுள்" நிறுத்தியது. அதன் பின் சீன அரசு அந் நிறுவனத்திற்கான உரிமத்தைப் புதுப்பித்தது. (ஸ்ரீ-2)

# இரணைமடுக்குள வான்கதவுகள் திறக்கப்பட்டதால் பன்னங்கண்டி கிராமம் நீரில் மூழ்கியுள்ளது

## மக்கள் இடப்பெயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையால் பன்னங்கண்டி கிராமம் நீரில் மூழ்கியுள்ளது. இதனால் இப்பிரதேச மக்கள் பல அவலங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில்,

இரணைமடுக்குளத்தின் மேலதிக நீர் வெளியேற்றுவதற்காக வான் கதவுகள் திறக்கப்பட்டன. இக்குளத்தின் நீர் பாயும் பகுதியை அண்மித்த பகுதியில் காணப்படும் இப் பன்னங்கண்டிக் கிராம மக்களே இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திலும் தங்கியுள்ளனர்.

இவற்றில் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த 12 குடும்பங்களுக்கான சமைத்த உணவினை அப்பகுதி கிராம அலுவலரின் ஒழுங்குபடுத்தலுடன் கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் வழங்கி வருகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்தில் வான் பாய்வதால் அப்பகுதியில் குடியிருக்கும் சோலை நகர் கிராமத்தில் 25 குடும்பங்கள் இடம்பெயர்ந்து சோலைநகர் பொதுநோக்கு மண்டபத்தில் தங்க வைக்கப் பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இம்மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப் படுகின்றது. (ஸ்ரீ-4-30)

# அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமாறு நேபாள ஜனாதிபதி இலங்கையிடம் கோரினார்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மீண்டும் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவிகளை வழங்குமாறு இலங்கை ஜனாதிபதியிடம் நேபாள ஜனாதிபதி கோரியதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மீண்டும் தெரிவித்துள்ளார்.

நமது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைமைகளுக்கு தீர்வு காண உதவிகளை வழங்குமாறு நேபாள ஜனாதிபதி ராம் பகதூர் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாகக் கோரியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றில் பொய் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறெனினும் வெளிவிவகார அமைச்சரின் இந்தக் கருத்தை நேபாள அரசாங்கம் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் நேபாள ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)



யூனியன் அஷ்யூரன்ஸ் பி.எல்.சி. கம்பனியில் ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பி.நித்தியானந்தன் என்பவரின் மரண இழப்பீட்டுத் தொகையாக 3இலட்சத்து 82ஆயிரம் ரூபா காசோலையை அவரது குடும்பத்திற்கு யாழ்.பிராந்திய முகாமையாளர் ந.சுகுணன் வழங்குவதையும் அருகில் சக உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடும்ப அங்கத்தவர் அடங்கலான காப்புறுதி திட்டம்

## அமுல்படுத்துவது குறித்து அரசு கவனம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் குடும்ப அங்கத்தினரை காப்புறுதி செய்யும் திட்டமொன்று அமுல்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஒரு மில்லியன் பெறுமதியான காப்புறுதி நலன் வழங்கப்படவுள்ளது.

பாராளுமன்ற விவகார அமைச்சர் சுமேத ஜயசேன அறிவித்துள்ளார்.

வரவு- செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் பணியாளர் எண்ணிக்கையை நானிகிலிருந்து ஐந்தாக அதிகரிப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டம் முழுமையான அபிவிருத்திக்குட்படுத்தப்பட வேண்டும்

## நாடாளுமன்றில் சில்வெஸ்திரி அலன்ரின் எம்.பி.தெரிவிப்பு

**கடந்த 6ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகின்றது.**



இன்று நடைபெறும் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவத்துறை, சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள், சமூகசேவைகள், சற்றாடல் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கான குழு நிலை விவாதத்தில் -யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் சார்பாக என்னுடைய கவனங்களை இங்கே தெரியப்படுத்துகிறேன்.

இந்த வரவு -செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்கான நிதி ஒதுக்கீடு அதிகமாக்கப்பட்டுள்ளது என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேச மக்களின் அபிவிருத்திக்கும் மறுவாழ்வுக்கும் உரிய கவனம் செலுத்தப்படவில்லை என்றும் சிலரால் கூறப்பட்டுள்ளது.

போர் முடிந்து இரண்டாண்டுகளுக்குள் வடபகுதியில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மக்கள் உயிர் அச்சமின்றி வாழ்கிறர்கள். யாருக்கும் அச்சமின்றி - தங்களின் வாழ்க்கையை அவர்கள் தாங்களாகவே திட்டமிடுகிறார்கள். அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பயிர்ச் செய்கை-கடற்றொழில் உள்ளிட்ட தொழில் முயற்சிகளிலும் மக்கள் அதிகமாக ஈடுபடு கிறார்கள்.

ஆனாலும் இந்த மக்களுக்கு ஏராளம் பிரச்சினைகளும் தேவைகளும் இருக்கின்றன. இவற்றைப் பேசித் தீர்ப்பதற்காகவே நாம் இங்கே கூடியிருக்கிறோம். நல்லிணக்கத்தின் மூலம் ஒரு புதிய வாழ்க்கைக்குச் செல்வதையே மக்கள் விரும்புகிறார்கள்.

நாட்டில் நிலவிய போரின் காரணமாக இதுவரையிலும் அபிவிருத்திக்கான சூழல் இருக்கவில்லை. இதனால் ஒழுங்கான வடிகால்களை அமைப்பது தொடக்கம் போதிய சுகாதார வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை.

வலிகாமம் வடக்கு, தீவகப் பகுதிகளில் இடம்பெயர்ந்து வந்த மக்களும் சேர்ந்து ஒரு சிறிய நிலப்பரப்பில் அதிகமான மக்கள் வாழும் நிலையே அங்கே காணப்படுவதால் இது யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் சன நெசரிலை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாண நகரத்தின் சுகாதார நிலைமைகள் மிக மேம்படுத்த வேண்டிய நிலையிலேயே இருக்கின்றன. வடிகாலமைப்புகள் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.

இவை நிறைவேற்றப்படாத காரணத்தினால், சுகாதாரப் பிரச்சினைகளும் தொற்று நோய் அபாயங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

தீவுப்பகுதியில் மீளக்குடியேறுவோரின் தொகை அதிகரித்திருப்பதால் அங்குள்ள மருத்துவமனைகளுக்கான ஆளணிப் பற்றாக்குறையையும் வளப்பற்றாக்குறையையும் போக்கவேண்டியுள்ளது.

மீள்குடியேற்றப்பட்ட வடமராட்சி கிழக்கின் மருதங்கேணி மருத்துவமனையை மீண்டும் விரைவாக ஆரம்பிக்கவேண்டியுள்ளது. வடமராட்சி கிழக்கில் மீள்குடியேறிய மக்கள் மருத்துவ வசதிகளைப் பெறுவதற்காக அங்கே மிகச் சிரமப்படுகிறார்கள்.

வடமராட்சி கிழக்கில் மேலும் மீள்குடியேற்றம் நடைபெறவேண்டிய இடங்களான கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி போன்ற இடங்க்ளுக்கான நித்தியவெட்டை மருத்துவமனையையும் விரைவில் ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் ஆரம்பமாகியுள்ளதால், தெல்லிப்பளை மருத்துவமனையை விரிவாக்கி நவீனமயப்படுத்த வேண்டியுள்ளது.

இதேவேளை வடபகுதியிலுள்ள சித்த மருத்துவத்துறையையும் நவீனப்படுத்த வேண்டும். கைதடியிலுள்ள சித்த மருத்துவத் துறைக்குரிய மேலதிக வளங்கள் வழங்குவதற்கு அதற்கான கோரிக்கைகளை சித்த மருத்துவத்துறையினர் விடுத்திருக்கின்றனர்.

தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மேலும் விரிஸ்தரிக்கப்பட்டு வருகின்ற வேளையில் இந்த மருத்துவமனைக்கான சாதன வளங்களை மேலும் மேம்படுத்த வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் பட்டப்படிப்பை முடித்து நூற்றுக்கணக்கான தமிழ்பேசும் மருத்துவர்கள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுகின்றனர். யுத்தத்தினால் முழுமையாகப் பாதிக்கப்பட்ட எமது மாவட்டங்களில் மக்கள் மீளக் குடியேறியுள்ள நிலையில் மருத்துவர்களின் இன்றைய எமது மக்களின் அவசர, அவசிய சேவையை கருத்தில் கொண்டு எமது தமிழ்பேசும் வைத்தியர்களை எம் மக்களின் துயர் துடைக்க முன்வரவேண்டும் என இவ் உயரிய சபையின் ஊடாக நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

பட்டப்படிப்பை முடித்து ஒவ்வொரு வருடமும் வெளியேறும் மருத்துவர்களை அவர்களின் பிரதேசங்களில் கட்டாயமாக ஒருவருடத்திற்காவது சேவையாற்ற வேண்டும் என்ற கொள்கை ஒன்றும் வகுக்கப்பட வேண்டும் என கௌரவ சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப் பிரதேசங்களில் உள்ள சிறுவர் நிலைமை தொடர்பான கவனங்களை முன்வைக்கிறேன்.

சிறுவர் உரிமை மீறல்கள் தொடர்பாக தினமும் ஊடகங்களில் பல கவலைக்குரிய செய்திகள் வெளியாகின்றன.

சிறுவர் நலனிலும் பாதுகாப்பிலும் அரசாங்கம் கூடுதலான கவனங்களைச் செலுத்த வேண்டும்.

வடக்குக் கிழக்கிலும் நடைபெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் முன்வைப்பது அவசியமாகிறது.

நம்பிக்கை இழக்கும் சிறுவர்கள் சமூகத்தை எதிர்நிலையிலேயே வைத்து நோக்குவதற்கு முற்படுவர். ஆகவே இந்தச் சிறார்களின் எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் எதிர்காலம் குறித்து ஜனாதிபதி கொண்டிருக்கும் கரிசனைகள் பாராட்டு தற்குரியவை. எடுத்துக்காட்டாக போருக்குப் பின்னர் இடைத்தங்கல் முகாம்களில் இருந்து ஆதரவற்ற சிறார்களையும் போரினால் அங்கவீனமான சிறார்களையும் அரசாங் கம் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் பல நூற்றுக்கணக்கான சிறார்கள் சிறுவர் இல்லங்களில் தங்கியுள்ளனர். இந்தச்சிறுவர் இல்லங்களை உள்ளூர்களிலுள்ள சமூக அமைப்புக்களே பராமரித்து வருகின்றன. ஆனாலும் இந்த இல்லங்களுக்கான உதவிகள் மேலும் தேவைப்படுகின்றன.

யாழ்ப்பாண மா[illegible]த்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் [illegible]ருக்கின்ற வயோதிபர் விடுதிகளுக்கான உதவிகளையும் சமூக சேவைகள் அமைச்சு செய்யவேண்டியுள்ளது. அத்தோடு கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் இயங்கிய கிளிநொச்சி மாவட்ட வயோதிபர் இல்லத்தை மீண்டும் இயங்கவைப்பதற்கான அனுமதியையும் உதவியையும் சமூகசேவைகள் அமைச்சு செய்ய வேண்டும். இந்த வயோதிபர் இல்லம் இப்போது படையினரின் பாதுகாப்பிலுள்ளது.

இங்கேயிருந்த வயோதிபர்கள் வவுனியாவில் தற்காலிக இல்லமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பதை சுட்டிக்காட்டுகின்றேன்.

இவ்வாறே யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உபகாரச் சம்பளம் பெறுவோரின் பிரச்சினைகளும் இருக்கின்றன. இவர்களுக்கான உதவு தொகையை மேலும் அதிகரிக்கவேண்டும். இவர்கள் ஆதரவற்ற நிலையில்தான் அரசாங்கத்தின் உபகாரச் சம்பளத்தைப் பெறுகிறார்கள்.

யுத்தத்தைச் சந்தித்த நாடுகள் இவ்வாறான நிலைமையில் அவர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளைச் செய்தே இந்தநிலைமையை மாற்றியிருக்கிறார்கள்.

அந்த யுத்தத்தின் வடுக்களைத் தாங்குவோரைப் பராமரிப்பதும் அவர்களுக்கு மறுவாழ்வளிப்பதும் அரசாங்கத்தின் கடமையாகிறது.

இந்த மாவட்டங்களில் அங்வீன முற்றோரின் தொகை ஏறக்குறைய பத்தாயிரத்துக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளாக 2 ஆயிரத்து 311 பேர் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். கிளிநொச்சியில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கும்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தின் மொத்த விதவைகளின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 575ஆகும். இந்த விதவைகளில் பெரும்பாலானவர்களுக்கு ஆதரவோ உதவிகளோ இல்லை.

இவர்களுக்கான வீட்டு வசதி, மலசல கூடவசதிகள் போன்றவற்றைச் செய்யவேண்டிய நிலை உள்ளது. அத்துடன் இவர்களுக்கான வாழ்வாதார உதவிகளும் தேவைப்படுகின்றன.

இதில், ஆயிரத்து 347 பேர் 21வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளம் விதவைகள். 4 ஆயிரம் பேர் 20 வயது தொடக்கம் 20 வயதுக்குட்பட்டவர்கள். இவர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்களைச் செய்வதன் மூலம் இவர்களுடைய குடும்பங்களின் வறுமையையும் போக்க முடியும்.

அதேவேளை அபிவிருத்தி திட்டங்களிலும் சலுகை தொழிற்கடன் திட்டங்களிலும் இவர்களை இணைப்பதன் மூலம் விதவைகள் பிரச்சினையைத் தீர்ப்பது மட்டுமல்ல, இந்தக் குடும்பங்களின் இளைய வயதுப் பிள்ளைகளின எதிர்காலத்தையும் பாதுகாக்க முடியும்.

விதவைகள், அங்கவீனர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்களையும் தொழிற்பயிற்சிக்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

வடக்கிலிருந்து மண் அகழ்வும் சுண்ணக்கல் அகழ்வும் ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளன. அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சிறப்பு அடையாளமான பனைவளப் பாதுகாப்பு கண்டல்காட்டின் பராமரிப்பும் அவசியமாகும்.

யாழ்ப்பாணம் ஒரு சிறுதீவு. காடுகளோ ஆறுகளோ இல்லாத பிரதேசம். அங்கே குடிநீருக்கே அடுத்த மாவட்டத்தை எதிர்பார்த்திருக்கும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான விசேட திட்டத்துக்கு அரசாங்கம் ஏற்பாடொன்றைச் செய்யவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நான் சுட்டிக்காட்டிய விடயங்கள் இன்று அவசர நிலையில் மேற்கொள்ளப்பட் வேண்டிய முக்கியமான கவனத்திற்குரியவையாக இருக்கின்றன. இவற்றில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிற்கு விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவேண்டும்.

## புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரபாகணேசன் திட்டம்

புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரபாகணேசன் எம்.பி.திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் லண்டன் விஜயத்தின் போது ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து பிரபாகணேசன் பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானித்துள்ளார்.

மேற்குலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் லண்டன் விஜயத்தின் போது ஏற்பட்ட சர்ச்சைகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்தப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

## சீனாவை ஆதரித்து நோபல் பரிசளிப்பு விழாவை இலங்கை புறக்கணிப்பு

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நோபல் சமாதான பரிசளிப்பு விழாவை சீனாவுடனான நட்பின் அடையாளமாக இலங்கை புறக்கணிக்கின்றது. சீன அதிருப்தியாளர் ஒருவருக்கு இம்முறை நோபல் பரிசு வழங்கப்படுகின்றமையால் விழாவைப் புறக்கணிப்பதாக வெளிநாட்டு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மட்டும் அன்றி சீனா, கியூபா, ஈரான், ரஷ்யா ஆகியன உட்பட 19 நாடுகள் இவ் விழாவை புறக்கணிக்கின்றன. ஆயினும் இந்தியா இவ்விழாவில் பங்கேற்கின்றது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010

# பயிற்சி வினாத்தாள் - தமிழ் மொழியும் இலக்கியமும்

## பகுதி - II

2 மணித்தியாலங்கள்

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடையைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1) சுருக்கமான விடை எழுதுக.

(i) என்றந்தப் பேதையுரைத்தான் - இத்தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

(ii) பொறி என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.

(iii) எவ்வளவு வறுமை வரினும், மாணவர்கள் கல்வியில் அதிக நாட்டம் காட்டவேண்டுமென அதிபர் கூறினார் இவ்வாக்கியத்தின் தலைமைத் தொடரையும், சார்புத் தொடரையும் வேறுபடுத்தி எழுதுக.

(iv) "கீர்த்தனா, தூரிகையால் வர்ணம் தீட்டினாள்" 'ஆல்' உருபுக்குப் பொருத்தமான சொல்லுருபைக் கையாண்டு வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

(v) மாணவன் கவிதை எழுதினான் இவ்வாக்கியத்தை பிறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(vi) பின்வரும் பகுபதங்களை பகுபத உறுப்புக்களாகப் பிரித்துக் காட்டுக.
வந்தான், பிரித்தனன்

(vii) "இரண்டு கண்களினின்றும் கண்ணீர் முத்துக்கள் கீழே உதிர்ந்தன" இது எவ்வகை அணி? விளக்குக.

(viii) எழுத்தாக்கமொன்றை திறனாய்வு செய்யும் போது அடிப்படையாகக் கொள்ள வேண்டிய மூன்று விடயங்களும் எவை?

(ix) அறிக்கை எழுதுவதால் ஏற்படும் நன்மைகள் இரண்டு தருக.

(x) அழைப்பிதழ் ஒன்றில் இடம் பெறவேண்டிய அம்சங்கள் எவை?

*(20 புள்ளிகள்)*

2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(அ) இலவசக் கல்விக்காக இன்றைய அரசு பெருந்தொகைப்பணத்தை வருடாந்தம் செலவு செய்து வருகிறது. ஆயினும் அதன் பெறுமதியை மாணவர்களும், பெற்றோர்களும் முழுமையாக விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. இதனை எடுத்துரைக்கும் வகையில் விளக்கக் கட்டுரை.

(ஆ) வாசிப்பு இனிய பொழுதுபோக்கு மட்டுமல்ல அறிவை வளர்க்கும் முழுமையான நெறியுமாகும். தொலைக்காட்சியின் வருகையின் பின்னர் வாசிப்பு பின்னோக்கிச் செல்கின்றது, மாணவர்களின் மொழியாற்றல் பின்தங்கியுள்ளது, உடல் நலம் பாதிப்படைகின்றது போன்ற கருத்துக்களை முன்வைத்து மாணவர் மன்றத்தில் உம்மால் ஆற்றப்படும் சொற்பொழிவு.

(இ) "நேரம் பொன்னானது அதனை வீணாக்காதீர்கள்" என்ற கருத்து பொதுவாகப் பேசப்பட்டாலும் வெளிநாட்டவர்களைப் போல நமது நாட்டவர்கள் நேரத்தைப் பயன்படுத்துவதில்லை. நமது நாட்டவர்கள் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துகின்றார்கள் என்ற கருத்துடையவருக்கும் இடையிலான ஓர் உரையாடல்...

(ஈ) வறிய குடும்பத்தில் மூத்த பிள்ளையாகப் பிறந்த ரமேஷ் தனது பெற்றோரையும் இரு சகோதரிகளையும் சிறப்பாக வாழவைக்க வேண்டும் என்பதற்காக அயராது பாடுபடுகிறான். முயற்சி திருவினை யாக்கும் என்ற கருவை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறுகதை.

*(25 புள்ளிகள்)*

3) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

சமூகங்களில் தற்பொழுது மனிதாபிமானமற்ற செயல்கள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மனித வரலாறு தொடங்கும் கால கட்டங்களில் நாகரீகம் குறைந்த மனிதர்கள் இருந்திருக்கலாம். ஆனால் மனிதப் பண்பாடுகள் நிறையப் பெற்றிருந்தனர். நாகரீகம் என்று இங்கு குறிப்பிடுவது மனித குலம் அடைந்த உலகியல் சார்ந்த வாழ்க்கை வசதிகள், வாழ்க்கை முன்னேற்றங்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிலைமைகளையேயாகும். அன்றைய மக்கள் குறைந்தளவு வாழ்க்கை வசதிகளையே கொண்டிருந்தனர். உணவு, உடை, இருப்பிடம், போக்குவரத்து, சுகாதாரம், தொழில்கள் என்பவற்றில் இன்று போல் அன்று அபிவிருத்தி பெற்றிருக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் விசாலமான மனங்களைப் பெற்றிருந்தனர். மனிதாபிமானம், மனித தர்மம், வாழ்க்கை அறங்கள் என்பவற்றில் பெரிதும் முன்னேற்றம் கண்டிருந்தனர். சான்றாண்மையைப் போற்றி வாழ்க்கையிலும் கடைப்பிடித்தனர். சுருங்கக் கூறினால் அன்றைய மனிதர்கள், மனிதப்பண்பாட்டில் உயர்ந்து விளங்கினர்.

மனிதப் பண்பாடு என்பது அகம் சார்ந்தது. மனிதனிடம் உள்ளார்ந்து காணப்படுகின்ற உணர்வுகள், எண்ணங்கள் பண்படுத்தப்பட்டு, தூய்மைப்படுத்தப்பட்டு வெளிப்பாடாகும் போது பண்பாடு தோன்றுகின்றது. மனித உள்ளங்களில் ஊற்றெடுத்து வெளிப்படுவதால் மனிதப்பண்பாடு எனப்படுகின்றது. பண்பாடு வெளிப்படுதல் என்றால் ஒழுக்கத்தின் மூலமே அதனைக் காணமுடிகிறது. பேச்சிலும் செயலிலும் பண்பாடு துலங்கும் போதுதான் அதனை மதிப்பீடு செய்ய முடியும். நல்ல பண்பாடு உடையவர்கள் பண்பாடு இல்லாதவர்கள் என மக்களைப் பாகுபாடு செய்து மதிப்பிடுவதற்கு அளவு கோலாக உள்ளது ஒழுக்கம் ஆகும்.

வெறுமனே நாகரீக முன்னேற்றம் மாத்திரமே சமூகத்தில் ஏற்பட்டு விட்டால் மனித வளர்ச்சி உயர்ந்துவிட்டது என்று கொள்ள முடியாது. விஞ்ஞானம், தொழிநுட்பம் ஆகிய துறைகளின் பெருவிருத்தியால் நாகரீகம் வளர்கின்றது. இத்தகைய புறவளர்ச்சியின் பயனாக மனிதர்கள் தாம் வாழ்கின்ற பௌதிகச் சூழலைத் தமக்கு ஏற்றதாக மாற்றியமைத்துக் கொள்கின்றனர். இயற்கையைத் தமது விருப்பத்திற்கு இசைந்து கொடுக்கச் செய்கின்றனர். நாகரீக முன்னேற்றம் மனிதன் எந்த அளவிற்கு வெல்லும் சக்தியைப் பெற்றுவிட்டான் என்பதைக் காட்டுவதாக உள்ளது.

*(10 புள்ளிகள்)*

4) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்ட இந்த உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற் பிறந்த பத்திரிகைப் பெண்ணே
அறிஞர் தம் இதய ஓடை ஆழ நீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்களை தீர்த்துக் குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப் பெண்ணே உன் நலம் காணார் ஞாலம் காணார்

(i) பத்திரிகையை கவிஞர் எவற்றிற்கு உருவகிக்கின்றார்?

(ii) பத்திரிகையின் பணிகள் என்று கவிஞர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

(iii) ஞாலம் காணார் என்று குறிப்பிடப்படுபவர்கள் யார்?

(iv) "பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி நீதான்" இந்த வரியின் பொருளினை உமது நடையில் எழுதுக.

(v) பின்வரும் சொற்களின் பொருள்களை எழுதுக.
(அ) அகம் (ஆ) துயில்


*(10 புள்ளிகள்)*

5) மார்ச் 22ம் திகதி "சர்வதேச நீர்த்தினம்" கொண்டாடப்படுகின்றது. இதனை ஒட்டி உமது பாடசாலை மாணவர்கள் "நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம்" என்ற கருப்பொருளில் ஒரு கலை இலக்கிய நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர். இந்நிகழ்ச்சி பற்றி மாணவத் தலைவர் என்ற முறையில் அதிபருக்கு சமர்ப்பிப்பதற்கு 100 சொற்களில் அமையுமாறு ஓர் அறிக்கை எழுதுக.

*(15 புள்ளிகள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவது எப்படி?



அறிவுடையாரே எல்லாம் உடையர். அறிவைக் கற்றலின் மூலமே பெறமுடியும். "கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையர் கண்ணுடையார் என்போர் கற்றோர்". "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பன கல்வி பற்றிய மகுட வாக்குகள். இதனை இன்றைய மாணவர் சமூகம் செவிப்புலனாக்கிச் செயற்படின் நாம் யுத்த காலத்தில் இழந்த கல்வியை மீளப்பெற முடியும். அத்துடன் "அந்தஸ்து என்றும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்" என்ற அறிவுருவாக நாம் அவையத்தில் முந்தியிருக்க முடியும்.

உலக மயமாக்கலுக்கு முகம்கொடுக்க வேண்டிய இன்றைய இளைய தலைமுறை மாணவர்கள் அந் நீரோட்டத்திற்கு ஏற்ப கல்வியையே பெறவேண்டியுள்ளது. கல்வியை பெற்றோரும் ஆசிரியரும் சமூகத்தினரும் தம்மீது சுமத்தும் சுமையாக மாணவர்கள் ஒரு பொழுதும் கருதக்கூடாது. கல்வி தேடிப் பெறவேண்டிய சொத்து அது வானத்திலிருந்து ஒருபொழுதும் விழமாட்டாது. அதனை ஒவ்வொரு மாணவரும் தம் எதிர்கால வாழ்க்கைப் போராட்டத்தை எதிர்கொள்ளவேண்டிய ஆயுதமாகக் கொள்ளவேண்டும். மாணவர் விரும்பும், மகிழ்ச்சியான மனம் விரும்பும், பசுமையான நினைவுகள் வாழ்நாள் பூராகவும் நம் நினைவில் நிற்பது போன்று கல்வி கற்றலை ஒவ்வொரு மாணவர்களும் தம் விருப்பமான செயலாக மகிழ்ச்சியான நிகழ்வாக மனத்தில் வரித்திக்கொண்டால் கற்றல் இலகுவாகிவிடும்.

முதலில் மாணவர்கள் கற்றலை நேசிக்க வேண்டும். மனித இனத்தின் சாபக்கேடுகளில் ஒன்று எம்மனமானது பண்ணாடையைப் போன்று கெட்ட செய்திகளை உடன் பற்றிக் கொள்ளும் இயற்கை இயல்பினது. எமது நல்ல எண்ணங்கள், எமது நல்ல சொற்கள், எமது நல்ல செயல்களால் தீய சிந்தனைகளின் பதிவை அகற்றிவிடலாம். இதனால் தான் வள்ளுவர் "உழுவ தெல்லாம் உயர் உழுக என்றார்" எமது நல்ல எண்ணங்களே எமது நல்வாழ்வு.

இயற்கை மனிதரில் மூன்று அடிப்படை விருப்பங்களை (Fundamental Desires) மூளையில் சொருகிவைத்துள்ளது. அவை நெடுநாள் வாழ வேண்டும் என்ற ஆசை, மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற ஆசை, தினமும் புதிய செய்திகளை, உண்மைகளை அறியவேண்டும் என்ற ஆசை. இந்தப் புதியன அறியவேண்டும் என்ற ஆசை எம்மிடம் இயல்பாக அமைந்த இயல்வூக்கமே எம் கல்வித் தேடலுக்கான வித்து. கல்வியின் நோக்கம்பரீட்சையில்வெற்றிபெறுவதற்கு அல்ல. "வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுதலே."

ஒவ்வொருவருடைய வாழ்விலும் வரவில்லாது செலவுகள் செய்து மகிழ்ந்திருக்கும் பருவம் மாணவப் பருவம். இதனை கற்பனைக் காலம் என்று கூட கொள்ளலாம். மாணவர்கள் மகிழ்ச்சியுடன் தாம் விரும்பி மனத்தில் வரித்துக்கொண்ட இலக்கினை முதலில் மனப் படமாக வரைந்து அதற்கு தினமும் உயிரூட்ட வேண்டும். உதாரணமாக நான் டாக்டராக வருவேன் என மனப்படம் வரைதல். இந்த மனப்பட "உறுதிக்கூற்றை" தினமும் நித்திரை மயக்கத்தின் போது வெளிமனத் தோற்றத்திலிருந்து ஆழ்மனத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். நமது ஆழ்மனப் பதிவுக ளால் சாதிக்க முடியாது ஒன்று உலகில் ஏதும் இல்லை என்பதை உளவியல் ரீதியாக உளவியலாளர்கள் நிருபித்துள்ளனர். இம்மனப் படக் கல்வி இன்று மேலைநாடுகளில் வழக்கில் உள்ளன.

அடுத்து, மாணவர் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள் ஒவ்வொன்றிலும் வகுப்பறை மட்டத்தில் சந்தேகமற்ற பூரணப் புலமையைத் தேடிக்கொள்ள வேண்டும். பரீட்சையின் வெற்றியானது வகுப்பறைக் கல்வியை கடினமாக்குவதிலிருந்து பெற முடியும் என்பது உளவியலாளரின் கருத்து. எனவே, மாணவர்கள் அனைவரும் தம் ஆசான்களிடமும் சக மாணவர்களிடமும் சந்தேகங்களை உசாவி சரியான தீர்வை அறிந்துகொள்ள வேண்டும். பெரிய பாடவிதானங்களை சிறு குறிப்பாக எழுதி அதன் சுருக்கத்தை குறிப்புப் புத்தகத்தில் ஒரு பகுதியில் குறித்துவைத்து அதனை அடிக்கடி நினைவூட்டிக்கொள்ள வேண்டும். முக்கியமான பகுதியை அடையாளமிட்டும் நினைவூட்டிக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பாடத்தையும் மீட்டுப்பார்க்க மாணவர்கள் அவகாசத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். (Revision) கேள்விகளுக்கான பதில்களும் ஒற்றுமைத் தன்மை; வேற்றுமைத் தன்மைகளை தொடர்புபடுத்தி நினைவில் நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

### கற்றல் நடவடிக்கை

கற்கும் போது மாணவர்கள் மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுப்பது போன்று கற்க வேண்டும். நான் தான் படிக்கிறேன் எனும் போது நானோடு தானும் இருப்பதை புரிந்துகொண்டால் பரீட்சையில் வெற்றி நிச்சயம். அப்பொழுது தான் ஆழமான விளக்கம் ஏற்படும். வகுப்பறைக் கல்வியின் போதும் வீட்டுக் கல்வியின் போதும் சாதாரண மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள் குறைந்தபட்சம் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட கடந்த காலப் பரீட்சை வினாக்களுக்கு விடை எழுதிக் கற்றிருக்க வேண்டும்.

அடுத்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்கும் இடம் அமைதியான சூழலாக அமைந்திருக்கவேண்டும். இரவில் படித்தபின் வேறு எந்த வேலையும் செய்யாது தம் மனப்படத்தை உறுதிப்படுத்திக்கொண்டு நித்திரைக்குச் சென்று விட வேண்டும். பகலில் கிரகிக்கப்பட்ட செய்திகள் யாவும் நித்திரையிலேயே மூளையினால் தரம் பிரிக்கப்பட்டு முக்கியமானவை பதிவு பெறுகின்றது. நித்திரைக்குச்சென்று படுக்கையில் இருக்கும் போது நித்திரை வரும்வரை அன்றைய தினம் கற்றுக்கொண்ட சிக்கலான பாடங்களை மனத்திரையில் ஓடவிட்டுப்பாருங்கள். அவற்றில் நினைவில் நிற்கவேண்டிய பெரும்பகுதி மறுநாள் மூளையில் பதிவு பெற்றிருக்கும். பிரச்சினையான மீதிப்பகுதியை மீண்டும் ஒரு முறை காலை நினைவூட்டிவிட்டு பரீட்சைக்குச் செல்லலாம்.

பரீட்சைக்கு முதல்நாள் படிக்கும் கோட்பாட்டை ஒருபோதும் கையாளாதீர்கள். நுனிப்புல் மேய்தலும் சப்பித்துப்பலும் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைத் தராது. கடினமான பாடங்களை மூளை பூரணமாக ஓய்வாக இருக்கும் போது கற்கவேண்டும். கற்றபின் வேறு வேலையில் ஈடுபடக்கூடாது. பசி பட்டினி இருந்து படிக்காதீர்கள். படிக்கும் மாணவர்களுக்கு புரத உணவும், மன ஓய்வும் உடல் ஓய்வும் அவசியம். மனனம் செய்ய வேண்டிய விடயங்களை உங்கள் கைகளால் குறிப்புக்களாக மீண்டும் மீண்டும் எழுதுங்கள். அவற்றை கணனிகளில் அல்லது ஒலிப்பதிவு நாடாக்களில் பதிந்து திரும்பத் திரும்பக் கேட்பதன் மூலம் நன்றாய் நினைவில் இருக்கும். ஆங்கிலத்தை தவறாது கண்ணால் பார்த்துத் தான் படிக்க வேண்டும்.

### பரீட்சைபற்றிய மனப்பயமும் ஞாபக மறதியும்

இவை இரண்டுமே தான் பெரும்பாலான மாணவர்களின் பரீட்சை தோல்வியின் மூல காரணம். இதற்கான அடிப்படைக் காரணம் பரீட்சைக்குத் தயார் செய்யவேண்டிய சரியான நெறிமுறையை அவர்கள் வழி அமைக்காததே ஆகும். வகுப்பறையை கடினமாக்கினால் மட்டுமே பரீட்சை மாணவர்களுக்கு இலகுவாகும். எல்லா மாணவர்களும் எல்லாப் பாடங்களையும் தமது விருப்பத்திற்குரிய பாடங்களாக முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும். எமது மூளையில் நினைவு வங்கியுள்ளது. (Memory Bank) இங்கு தான் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன.

ஞாபகம் என்பது எதிர்காலப் பயன்பாட்டிற்காய் கடந்த கால அனுபவங்களைப் பாதுகாத்தல் ஆகும். (Preservation of Bast Experience For Future Use of Memory) புலன்சார் நினைவாற்றலை நீண்ட கால நினைவாற்றலாக வேண்டின் மனனம் செய்ய வேண்டும். அல்லது அடிக்கடி நினைவுபடுத்தி அதனை மனப்பழக்கமாக்க வேண்டும். இதனையே ஆன்றோர் வைத்தொரு கல்வி மனப்பழக்கம் என்றனர். மாணவர்களின் ஞாபக மறதிக்கான முக்கிய காரணம் எமது மன அலைகளும் கடல் அலைகளும் பிரபஞ்ச சக்தியின் மின்காந்த அலைகளி னாலேயே ஏற்படுகின்றன.

இதனை மனச்சுழற்சி அலைகள் Mental frequency என ஆங்கிலத்தில் அழைப்பர். இந்த அலை எமது மூளையின் மின்னோட்டத்தில் சுழன்றுகொண்டிருக்கின்றது. இந்த மூளை மின் அலை சுழற்சியினை E.E.G என்னும் மின் மருத்துவ கருவியால் அளக்க முடியும். இந்த மூளை மின்னலைச் சுழற்சியின் இயற்கை அலைகளை பீற்றா அலைகள், அல்பா அலைகள், தீற்டா அலைகள், டெல்ரா அலைகள் என அவற்றின் சுழற்சி அளவு களுக்கு ஏற்ப மருத்துவ விஞ்ஞானம் பிரித் துள்ளது.

இது சாதாரணமாக 14-40 CPS ஆகும். டெல்டா அலைகள் 14CPS இல் இருக்கும் போது சாதாரணமாக மாணவர்களின் கிரகித்தல் பதிவுகள் மூளையில் இடம்பெறுகின்றன. மாணவர்கள் மனப்பயத்திற்கும் கோபத்திற்கும் ஆளாகும்போது அவர்களின் மனச்சுழல் ஆனது 20CPSற்குஏறிவிடுகின்றது. 14CPS இல் பதிவு பெற்ற செய்தியினை 20CPS இல் மீளப்பெற முடியாது போகிறது. இதுவே மாணவர்களின் ஞாபக மறதிக்கான மூல காரணம். இதனை தவிப்பதற்கு மாணவர்கள் பரீட்சை பற்றிய பயம் நீங்க பரீட்சைக்குத் தம்மை பூரணமாக தயார்ப்படுத்தி இருக்க வேண்டுவதுடன் பரீட்சையை எதிர்கொள்வ தற்கான தற்துணிவைக் கொண்டிருக்க வேண்டும்.

மேலும், மூளை மின்சுற்றுப் பீற்றா அலையினை மன ஒருமைப்படுத்தல் மூலம் 5-3CPS ற்குக் கொண்டுவருவதன் மூலம் விஞ்ஞானிகள் பொருட்களின் உண்மைகளை அறிகின்றனர். இச் சுற்றை 0-3 CPS ற்குக் கொணர்வதால் மெய்ஞ்ஞானிகள் தன்னை அறிகின்றனர் (KNOWS HIMSELF) மனித உயிர் சக்தியானது மூலாதாரத்தில் பெண்களில் நாதமாகவும். ஆண்களில் விந்தாகவும் (LIBIDO) புதைக்கப்பட்டுள்ளது. இந்த உயிராற்றலான லிபிடோவை உயர்வகுப்பு மாணவர்கள் அறிவைப் பெற வேண்டின் அதன் வழி திருப்ப வேண்டும். எனவே மாணவர்கள் பரீட்சைக் காலங்களில் காதல் கற்பனைகளைத் தவிர்க்க வேண்டும்.

**டாக்டர் ஆ.பேரின்பநாதன்**

### பரீட்சை நேர ஒழுங்கு:

அடுத்து மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை நேரஒழுங்கு பற்றியது. பரீட்சைத் தாளில் எந்தக்கேள்விக்கு முதலில் பதிலளிப்பது என்பதிலிலும் வெற்றி தங்கியுள்ளது. மாணவர்கள் கட்டாயமாக நன்றாகப் பதில் தெரிந்த கேள்விகளுக்கும், குறுகிய நேரத்தைக் கொண்டதுமான கேள்விகளுக்கும் முதலில் பதிலளித்துவிட வேண்டும். சிக்கலான கேள்விகளை மனப் பதற்றம் அடையாது அவகாசம் எடுத்துப் பதிலளிக்கவேண்டும். முதலில் எக்காரணம் கொண்டும் சிக்கலான கேள்விக்கு பதில் அளிக்கத் தொடங்கக்கூடாது.

---

பூநகரிப் பிரதேசத்தில்

# வீதியை மேவி வெள்ளம் பாய்வதால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பஸ்சேவை

பூநகரி பிரதேசமெங்கும் தொடர்ந்து 13ஆவது நாளாக பெய்துவரும் கடும்மழை காரணமாக பூநகரி மன்னார் வீதியில் பாலியாறும் மண்டைக்கால்லாறும் வீதிக்கு மேலாக 11/2 அடி உயரத்தில் 100 மீற்றர் இற்கு கூடுதலான அகலத்தில் நீர் பாய்ந்து கொண்டிருப்பதால் நேற்று முதல் பஸ்சேவைகள் 50 வீதமாக குறைக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை நடைபெற்றுவருகிறது.

இதனால் பயணிகள் அனைவரும் தம் பயணத்தை தொடரமுடியாமல் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. குடமுறுட்டி பூநகரி பரந்தன் வீதியிலுள்ள ஆறு ஒரு அடிக்கு மேலாக வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது.

இதே வீதியில் 4 இடங்களில் சிறிய சிறிய ஆறுகள் பாய்ந்து கொண்டிருப்பதால் வீதியின் கரையோரம் அரித்துச் செல்லப்பட்டுள்ளது.

இதனால் [illegible] டுள்ளதோடு [illegible] இடங்களில் பயணிகளை இறக்கி மிகவும் கவனமாக பயணத்தை தொடருகின்ற நிலை காணப்படுகின்றது.

இதனால் வவுனியா , யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களுக்கு பயணிக்கும் பேருந்து நேரம் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளதால் பயணிகள் பெரும் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர். தொடர்ந்தும் மழைபெய்யும் நிலை [illegible] பேருந்து பயணம் தடைப்படக் [illegible] காணப்படுகிறது. (ஸ்ரீ-3-84)

---

# போதனாவியல் டிப்ளோமாதாரர்களை ஆசிரியர்களாக ஆட்சேர்ப்பு செய்தல்

(யாழ்ப்பாணம்)

கற்பித்தல் பற்றிய தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களை மாகாண அரச சேவைத் திட்டத்தின் கீழ் ஆசிரியர்களாக ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனைக்கு சமூகமளிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றைய வலம்புரியில் 16ஆம்திகதி எனத் தவறுவதலாக பிரசுரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருப்பின் நல்லிணக்க ஆணைக்குழுவில் முறையிடலாம்

## கருஜயசூரியவுக்கு அரசாங்கம் ஆலோசனை

(கொழும்பு)

போர்க்குற்றச் செயல்கள் இடம்பெற்றிருந்தால் அது குறித்து கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியாவிற்கு அரசாங்கம் ஆலோசனை வழங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடைபெற்ற போரின் போது குற்றச் செயல்கள் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பான சாட்சியங்களுடன் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்க முடியும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, கரு ஜயசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான மீட்புப் பணிகளை இழிவுபடுத்தும் வகையில் கரு ஜய சூரிய கருத்து வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நாட்டின் நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சஜித் பிரேமதாஸ புலிகள் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குறிப்பிடுகின்றார். கரு ஜயசூரிய போர்க் குற்றச் செயல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென குறிப்பிடுகின்றார்.

இதன்படி கட்சிக்குள் இரண்டு நிலைப்பாடுகள் காணப்படுகின்றதா என அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கரு ஜயசூரியவின் கருத்துக்கள் பிரிவினைவாதத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் அமைந்துள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை போர்க் குற்றச் செயல்கள் தொடர்பாகவோ அல்லது புலம்பெயர் தமிழர்கள் பற்றியோ தாம் குறிப்பிடவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# புனே குண்டு வெடிப்பு சூத்திரதாரிக்கு கொழும்பில் வைத்துப் பயிற்சி!

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை நடத்திய லஷ்கர் ஈ தொய்பா முஸ்லிம் தீவிரவாதக் குழுவின் சூத்திரதாரியாக ஹிமாயற் பேய்க் வெடிகுண்டுகளைப் பொருத்துவதற்கான பயிற்சியை கொழும்பிலேயே பெற்றுக் கொண்டார் என மகாராஷ்டிராவிலுள்ள புனே நீதிமன்றம் ஒன்றில் அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள. குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள புனே நீதவான் நீதிமன்றத்தில் கடந்த 6 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரத்தில், சந்தேக நபரான ஹிமாயற் பேய்க், 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த போது இருவரால் வெடிகுண்டுகளைப் பொருத்துவது தொடர்பில் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் இடம்பெற்ற ஜெர்மன் வெதுப்பக உணவு விடுதி குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவுப் பொலிஸார் ஹிமாயற் பேய் மீது 2ஆயிரத்து 500 பக்கங்களைக் கொண்ட குற்றப்பத்திரிக்கை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்கள். இந்தக் குற்றப் பத்திரிகை கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை சந்தேக நபரான ஹிமாயற் பேய்கிடம் கையளிக்கப்பட்டது.

சந்தேக நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த நீண்ட குற்றப்பத்திரிகையின் சில விடயங்களை எதிர்தரப்புச் சட்டத்தரணி பத்திரிகையாளர்களுடன் பகிர்ந்து கொண்டதன் மூலமாக அதிலுள்ள சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

2010 ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு வெடிக்கத்தக்கதாக ஜெர்மன் வெதுப்பக உணவு விடுதியில் இந்தக் குண்டு வைக்கப்பட்டது. திட்டமிட்டபடி இந்தக் குண்டு வெடித்த போது 17 பேர் கொல்லப்பட்டதுடன் 60 பேர் படுகாயமடைந்தனர். இது தொடர்பாக ஹிமாயற் பேய்க் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம் தீவிரவாத அமைப்பு ஒன்றின் முக்கிய நபரான ஹிமாயற் பேய்க் கொழும்பில் பயிற்சி பெற்றதாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்த போது அரசாங்கம் அதனைத் திட்டவட்டமாக மறுத்திருந்தது.

ஆனால் தற்போது சந்தேக நபருக்கு எதிரான குற்றப் பத்திரிகையிலும் இந்தப் பயிற்சி தொடர்பாகக் குறிப்பிட்டிருப்பது கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான உறவுகளில் ஒரு கீறலை ஏற்படுத்தவதாகவே அமையும் என இராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன

அதேவேளை இந்தியாவின் கேரளா மற்றும் தமிழ் நாட்டில் தளங்களை அமைப்பதற்கான உதவி நிலையம் ஒன்றை கொழும்பில் உருவாக்க லஷ்கர் ஈ தொய்பா அமைப்பு முயற்சித்தாக விக்கலீக்ஸ் இணையத்தளம் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் எதனையும் கைச்சாத்திடப் போவதில்லை

## கோத்தபாய தெரிவிப்பு



பாகிஸ்தானுடன் எந்த ஒரு பாதுகாப்பு கூட்டு ஒப்பந்தத்தையும் இலங்கை கைச்சாத்திடப் போவதில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அண்மையில் பாகிஸ்தானிய ஜனாதிபதி தலைமையிலான உயர் மட்டக் குழு ஒன்று இலங்கை வந்திருந்தது.

அக்குழுவில் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இடம் பெற்று இருந்தார். பாகிஸ்தானுடன் இலங்கை பாதுகாப்பு கூட்டு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட உள்ளது என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்நிலையில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய பேட்டி ஒன்றிலேயே கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாகிஸ்தானுடன் இலங்கை பாதுகாப்புக் கூட்டு ஒப்பந்தம் எதனையும் கைச்சாத்திடப் போவதில்லை. இப்படி ஒரு ஒப்பந்தம் குறித்து அரசு பேசியிருக்கவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தானிய குழுவினருடன் பாதுகாப்புச் சம்பந்தமான பேச்சுக்களில் இறங்கி இருக்கவேயில்லை. நாட்டில் யுத்தம் இருந்தபோது கூட கடந்த மூன்று வருடங்களில் எந்தவொரு நாட்டுடனும் இலங்கை பாதுகாப்பு கூட்டு ஒப்பந்தம் எதனையும் செய்து இருக்கவேயில்லை என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இந்தியாவிலிருந்து 2 ஆயிரம் தொன் கோழி இறைச்சி இறக்குமதி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 2 ஆயிரம் தொன் கோழி இறைச்சியை இறக்குமதி செய்ய இலங்கை முடிவு செய்துள்ளது. உடனடியாக 500 தொன் இறக்குமதி செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துமஸ் விழா நெருங்கி வருவதால், இந்தியாவிலும் கோழி இறைச்சிக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்று கோழிப் பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து இலங்கையில் உள்ள கோழிப் பண்ணை உரிமையாளர்கள் கூறுகையில்,

நாங்கள் மாதத்திற்கு 9 ஆயிரத்து 800 தொன் கோழி இறைச்சியை உற்பத்தி செய்கிறோம். இந்த மாதம் 10 ஆயிரம் தொன் உற்பத்தியானது. எனினும் நாட்டின் தேவையை எங்களால் பூர்த்தி செய்ய இயலவில்லை. தொடர்ந்து பற்றாக்குறை நீடிக்கிறது என்று தெரிவித்துள்ளனர். அதனால் இந்தியாவில் இருந்து வாங்க அதிக ஆர்வம் காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தாய்லாந்தின் பாங்கொங் நகரில் 50 இலங்கையர்கள் சுற்றிவளைப்பு

தாய்லாந்து தலைநகர் பாங்கொங்கில் நேற்று அதிகாலை இலங்கையைச் சேர்ந்த 50 சட்டவிரோத குடியேற்றவாசிகளை அந்நாட்டு பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

இவர்களில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும் அடங்குகின்றரென நம்பப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாங்ஹென் வீதியிலுள்ள சொய் பேம்ஸின் விடுதி அறைகளில் இவர்கள் தங்கியிருந்தபோது தாய்லாந்துப் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர். இவர்களிடம் விசாரணை மேற்கொள்ளும் முகமாக [illegible] சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

2010.12 09

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1582- (ஜலியன்,ஞாயிற்றுக்கிழமை) - பிரான்ஸ் அடுத்த நாளை திங்கட்கிழமை, டிசம்பர் 20 (கிரகோரியன்) ஆக்கியது.
- 1793- நியூயோர்க் நகரின் முதலாவது நாளிதழ் "தி அமெரிக்கன் மினேர்வா" வெளியிடப்பட்டது.
- 1856- ஈரானிய நகரம் புஷேஹர் பிரித்தானிய ஆக்கிரமிப்புப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1905- பிரான்சில் அரசையும் கிறிஸ்தவ தேவாலயங்களையும் பிரிக்கும் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது.
- 1917- பிரித்தானியர் பாலஸ்தீனத்தின் ஜெருசலேம் நகரைக் கைப்பற்றினார்.
- 1922- போலந்தின முதலாவது ஜனாதிபதியாக "கப்ரியேல் நருட்டோவிச்" தெரிவு செய்யப்பட்டார்.
- 1937- ஜப்பானியப் படைகள் சீன நகரான நான்ஜிங்கைத் தாக்கின.
- 1940- இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய மற்றும் இந்தியப் படைகள் இத்தாலியப் படையினரை எகிப்தில் தாக்கின.
- 1941- இரண்டாம் உலகப் போர்: சீன குடியரசு, கியூபா, குவாத்தமாலா, பிலிப்பீன்ஸ் ஆகியன ஜெர்மனி மற்றும் ஜப்பான் மீது போரை அறிவித்தன.
- 1946- இந்திய சட்டசபை ராஜேந்திர பிரசாத் தலைமையில் அமைக்கப்பட்டது.
- 1953- ஜெனரல் எலெக்ட்றிக் நிறுவனம் தனது நிறுவனத்தில் பணியாற்றிய கம்யூனிஸ்ட்கள் அனைவரையும் பணிநீக்கம் செய்தது.
- 1961- பிரித்தானியாவிடம் இருந்து தங்கனீக்கா விடுதலை பெற்றது.
- 1979- பெரியம்மை நோய் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. மனித உயிர்க் கொல்லி நோயொன்று முற்றாக அழிக்கப்பட்டது. இதுவே முதலாவதாகும்.
- 1986- இந்தியைத் திணிக்கும் அரசியல் சட்ட நகலை எரித்ததற்காக தி.மு.க.தலைவர் மு. கருணாநிதி உள்ளிட்ட 10 தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.
- 1990- லெக் வலேசா போலந்தின் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியானார்.
- 1992- வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ், இளவரசி டயானா இருவரினதும் பிரிவினை அறிவிக்கப்பட்டது.
- 2003- மொஸ்கோ நகர மத்தியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 6பேர் கொல்லப்பட்டனர்.
- 2006- மொஸ்கோவின் மருத்துவமனை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி 45 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்பு**

- 1946- சோனியா காந்தி, இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர்

**இறப்பு**

- 2006- சு. வில்வரத்தினம் (சு.வி.) ஈழத்துக் கவிஞர் (பி.1950)

**இன்று அனைத்துலக ஊழல் எதிர்ப்பு தினமாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010

# பயிற்சி வினாத்தாள் - தமிழ் மொழியும் இலக்கியமும்

## பகுதி - III

## 2 மணித்தியாலங்கள்

☞ அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடைஎழுதுக.
☞ 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7ஆம் வினாக்களில் ஏதாவதொரு வினாவுக்கும் விடை எழுதுக.
☞ இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

*1) சுருக்கமான விடை எழுதுக*

(i) "ஓராயிரம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ"
(அ) மாமணி எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) இவ் அடிகள் உணர்த்தும் பொருள் யாது?

(ii) ஏர் எழுபது என்பது யாது? இது யாரால் பாடப்பட்டது?

(iii) "சொல்லுக சொல்லைப் பிறிது ஓர் சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இன்மை அறிந்து" இதனைக் கொண்டு கூட்டி எழுதுக.

(iv) கலம்பகம் என்பதன் பொருள் யாது?

(v) முதுமொழி வெண்பாவின் ஆசிரியர் யார்?

(vi) "என்னிக்கும் பிடிவாதம் என்னிக்கும் சண்டை நான் அழாத நாள் உண்டா?" யாருக்கு யாரால் கூறப்பட்டது?

(vii) "கருணாகரனின் நடை மேகத்தின் கதிபோல் இருக்கும். அவன் வரும்போது தரையிலே தேவன் நடந்து வருவது போல் இருக்கும்" இங்கு கையாளப்பட்டுள்ள அணியை விளக்குக?

(viii) குமாரப்புலவர் தன் பெயரை எவ்வாறு சேவகனிடம் எடுத்துக் கூறுகின்றார்?

(ix) பாலோ டளாயநீர் பாலாகு மல்லது... என்ற நாலடியார் பாடலின் மையக் கருத்தைத் தருக.

(x) "பட்டணம் ஐயா, இன்றைக்கு இவனுக்கு நேர்முகப் பரீட்சை" இக் கூற்று இடம்பெற்ற சந்தர்ப்பத்தைத் தருக.

*(20 புள்ளிகள்)*

*2)* பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புகளை விளக்கி எழுதுக.

(அ) கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர் - தெற்ற
அறை கல் அருவி அணிமலை நாட
நிறைகுடம் நீர் தளும்பல் இல்.

(ஆ) மடல் பெரிது தாழை மகிழினது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீருமாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

(இ) தார்த் தெருவிலே சைக்கிள்; தேரோட்டி தர்மலிங்கம். பின்னால் சைக்கிள் கரியரில் கால்களை இருபக்கமும் போட்டு இருந்த அர்ஜுனனுக்கு, நேர்முகப் பரீட்சைக்கு வேண்டிய ஒரு சில கடைசி நேர அறிவுரைகளை கூற முயன்றான். ஆனால் இந்தக் கீதோப தேசத்தைக் கேட்கும் நிலையில் விமலன் இல்லை.

(ஈ) கம்பர் சோழனைப் பார்த்து "வால்மீகி தெய்வமாக்கவி அவர் இயற்றிய காவியம் திருப்பாற்கடல். பாற்கடல் முழுவதையும் பருகுவதற்கு ஒரு பூனையால் முடியுமா? தாங்களோ அதைத் தமிழ்ப்படுத்த வேண்டும் என்கிறீர்கள். என்னால் முடியக்கூடிய காரியமா அது? கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் இயற்றலாம் அவர் ஏன் அஞ்சுகிறார்?" என்று கூறினார்.

*(20 புள்ளிகள்)*

*3)* "விடியுமா" எனும் சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.
(i) "சிவராமையர் டேஞ்சரஸ்" என்று எழுதப்பட்ட தந்தி அக்குடும்பத்தில் எற்படுத்திய தாக்கத்தினை ஆராய்க.
(ii) அம்பி எனும் தம்பியின் கதாபாத்திரத்தினூடாக குஞ்சம்மாளின் இயல்புகள் வெளிக்காட்டப்படுமாற்றை ஆதாரப்படுத்துக.

அல்லது

பின்வரும் நீதிப்பாடல்களில் வெளிப்படுத்தப்படும் நீதிக்கருத்துக்களை விளக்குவதோடு அது தற்காலத்தில் எவ்வாறு பொருந்துகின்றன என்பதையும் ஆராய்க.
(i) கண்ணிற் சிறந்த உறுப்பில்லை .....
(ii) உறுபுலி யூனிரையின்றி ஒருநாள் .....

*(15 புள்ளிகள்)*

*4)* பார்வைகள் எனும் சிறுகதையைத் துணையாகக் கொண்டு விளக்குக.
(i) "தனிமனித ஆளுமை பல்வேறுபட்ட இடங்களில் வேறுபடும்" இக்கூற்றினை மூன்று இடங்களை ஆதாரப்படுத்தி விளக்குக.
(ii) "பிள்ளையின் கல்வியில் தந்தையின் பங்களிப்பு மிக உன்னதமானது என்ற கருத்தினை இச் சிறுகதை புலப்படுத்தும்" இக் கூற்றினை நிரூபிக்குமுகமாக மூன்று விடயங்களை எடுத்துக்காட்டுக.

அல்லது

"கம்பர் கவித்துவமுடையவர் என்பதோடு பரிவான இயல்புமுடையவர்" என்பதனை கவிச்சக்கரவர்த்தி நாடகத்தை ஆதாரப்படுத்தி ஆராய்க.

*(15 புள்ளிகள்)*

✠ 5, 6, 7 ஆம் வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

*5)* "பாரதியார் தேசியப் பாடல்கள் மட்டுமன்றி இயற்கையையும், காதலையும் நயந்து பாட வல்லவர்" இக்கூற்றினை "பாரதியார் கவிநயம்" எனும் கட்டுரையினூடாக விளக்குக.

*(10 புள்ளிகள்)*

*6)* நந்திக் கலம்பகத்தினூடாக நந்திவர்மனின் புகழ் புலப்படுமாற்றை விளக்குக.

*(10 புள்ளிகள்)*

*7)* நக்ஷத்திரக் குழந்தை எனும் கதையில் மொழிநடையும், வர்ணனைச் சிறப்பும் சிறப்பாய் அமைந்துள்ளது. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

*(20 புள்ளிகள்)*

## பாம்புக்கடிக்கு இலக்கானவர் வைத்தியசாலையில் அனுமதி

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் பாம்புக்கடிக்கு இலக்காகிய ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த 5ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்,

வட்டக்கச்சி - மாயவனூர் பகுதியைச் சேர்ந்த அலோசியஸ் - பிரியந்தன் (வயது-14) என்பவரே இரவு 12 மணியளவில் பாம்புக்கடிக்கு இலக்காகியிருந்தார்.

இவரை சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்திருந்தும் சிகிச்சை பலளளிக்காமையால் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது. (ஸ்ரீ-4-30)

## காசியில் இடம்பெற்ற— குண்டுவெடிப்பில் 20பேர் பலி

வட இந்தியாவின் காசி மாநகரில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 20பேர் காயமடைந்துள்ளனர்.

பால் பாத்திரத்திற்குள் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததாக உத்தரப்பிரதேச பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாலையில் கங்கையில் நீராடவந்திருந்த பக்தர்கள் மத்தியில் குண்டு வெடித்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் பொலிஸார் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

நான்கு ஆண்டுகளுக்குமுன்பு காசியில் இடம்பெற்ற மற்றொரு குண்டுவெடிப்பில் 20பேர் கொல்லப்பட்டனர்.

இந்துக்களின் புனித நகரங்களில் காசி முக்கியமானது.

இதேவேளை இந்தக் குண்டுவெடிப்பைத் தாங்கள்தான் மேற்கொண்டதாக இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பு உரிமைகோரியுள்ளது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய அமெரிக்காவில் கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில்

ஐக்கிய அமரிக்காவின், பென்சில்வேனியா, காலைல் பகுதியில் அமைந்துள்ள டிக்கின் ஸன் கல்லூரியானது மோதலால் பாதிக்கப்பட்ட இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகா ணங்களில் இருந்து பெண் மாணவி ஒருவரைத் தெரிவுசெய்து, அவருக்குமுழுமையான புலமை ப்பரிசில் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இந்தப் புலமைப்பரிசில் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கும் கல்வியாண்டில் இருந்து நான்கு வருடங்களுக்கான லிபரல் ஆட்ஸ் பட்டப்படிப்புக்கு புலமைப்பரிசில் வழங் குகின்றது. இந்த நடவடிக்கையை ஒழுங்கு படுத்துவதற்கு மற்றும் ஆதரவு வழங்குவதற்கு உதவும்வகையில் Women at the Global Fore front www. womenatthe forefront. com ஸ்தாபகர் மற்றும் TEd Global Fellow www.ted.com ரோகினி தினகரன் உடன் இணைந்து அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகத்தின் http://pointpedro.org முத்துக் கிருஸ்ணா சர்வானந்தன் செயற்படுவார்.

Women at the Forefront என்பது முரண் பாட்டு வலயங்களில் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் தொடர்பில் கவனஞ் செலுத்தும் ஊடக செயற்திட்டமாகும்.

நான்கு வருடங்களுக்கான வகுப்புக் கட்டணம், உணவு மற்றும் தங்குமிடம் என்பன இந்தப் புலமைப்பரிசிலில் உள்ளடக்கப்பட்டுள் ளன. கல்வியாண்டு 2010, 2011 க்கான வருடாந்த நிதி பெறுமதி $ 51,950 ஆகும். எவ்வாறாயினும், விமானப் பயணம், புத்த கங்கள், தனிப்பட்ட செலவுகள் மற்றும் சுகா தார காப்புறுத்தி போன்றவற்றை தெரிவு செய் யப்படும் மாணவரே பொறுப்பேற்க வேண்டும். இதற்கான வருடாந்தபெறுமதி $5,000 ஆகும்.

விண்ணப்பதாரிகள் இனரீதியாக, சாதி ரீதியாக அல்லது சமூக வகுப்பு ரீதியாக அல்லது, சிறப்புத் தகுதி மற்றும் நிதித் தேவையின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவார்.

◆ கடந்த 3வருடங்களில்(2008, 2009 அல்லது 2010) நடைபெற்ற க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் போதிய சித்தி பெற்றதற்கான ஆவண ஆதாரங்கள்.

◆ ஐக்கிய அமெரிக்காவில் உயர்கல்வியைப் பெறுவதற்கான ஆங்கிலமொழி புலமையை உறுதிசெய்வதற்கான TOEFL அல்லது IELTS ஆவண ஆதாரங்கள்

◆ இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் 8 மாவட்டங்களில் ஏதேனும் ஒரு பகுதியில் வதிவதற்கான மற்றும் பாட சாலை சென்மைக்கான ஆவண ஆதாரம்.

◆ பெற்றோர், சகோதரர் அல்லது பாதுகாவல ரிடமிருந்து நான்கு வருடங்களுக்கு மேலதிக செலவான $ 5,000ஐ வழங்குவதற்கான தகைமையை உறுதி செய்யும் கடிதம். இந்த மேலதிக செலவை வழங்குவதற்கு இயலு மான நிலையில் இல்லாதவர்களும் விண்ணப்பிக்க லாம். ஏனெனில், புலமைப் பரிசில் நிகழ்ச்சியின் ஒழுங்கமைப்பாளர்கள் மேலதிக செலவினைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

◆ டிக்கின்ஸன் கல்லூரியில் கற்கை நிறை வடைந்தவுடன் இலங்கைக்கு திரும்புவதனை உறுதி செய்யும் கடிதம். தெரிவுசெய்யப்பட்ட பின்னர் முறைசார் உடன்படிக்கை கைச்சாத் திடப்படும்.

இந்த புலமைப்பரிசிலுக்கான தெரிவு நடைமுறையில், இரண்டாம் நிலை, பாடசாலை பரீட்சைகள் (இலங்கை அரசாங்கத்தின், கல்வி அமைச்சின், பரீட்சைகள் திணைக் களத்தினால் நடத்தப்பட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அல்லது அதற்கு இணையான வெளிநாட்டு தகுதி உட்பட சிறந்த கல்வி செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் ஆவணங் களுடன் பெண் மாணவிகளின் சுய விண்ண ப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அத்துடன், அமெரிக்க அல்லது பிரித்தானிய உயர் கல்வி முறைமையில் ; அனுபவம் வாய்ந்த நடுவர்கள் உள்ளடங்கிய குழுவுட னான நேர்முகப் பரீட்சையையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் எட்டு மாவட் டங்களில் எந்தவொரு பகுதியிலாவது வதிபவர் களாக மற்றும் பாடசாலை சென்றவர்களாக இருத்தல்வேண்டும். மேலதிகமாக, புலமைப் பரிசில் பெறுபர் கற்கை நிறைவடைந்த வுடன் இலங்கைக்கு மீண்டும்திரும்பி, மோதலால் பாதிக்கப்பட்ட எட்டு மாவட்டங் களின் ஏதாவதொரு பகுதியில் கலாசார, பொருளாதார, அரசியல் மற்றும்சமூகஅபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டும்என்பதுநிபந்தனை யாகும்.

தெரிவு செய்யப்படும் மாணவிக்கு, பட்டப்படிப்பு நிறைவடைந்த பின்னர் ஐக்கிய அமெரிக்காவில் தங்கியிருப்பதற்கான விசா வழங்கப்படாது. தெரிவு நடைமுறையில் ஈடுபட் டுள்ளவர்களுடன் குடும்ப உறவுகளைக் கொண் டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப் பங்கள் கவனத்தில்கொள்ளப்படமாட்டாது.

ஆர்வமுள்ள மாணவிகள் தமது விண்ணப் பத்தை வெளிப்படுத்தும் கடிதத்துடன், பின் வரும் ஆவணங்களை (Scholarship to Study in the USA, C/O 03, Somasund aram Road, off Station Road, Wella watte, Colombo -06) என்ற முகவரிக்கு எதிர்வரும் 26ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். அதுதவிர, 2011 ஆம் ஆண்டுக்கான கல்வி நடவடிக்கைக ளுக்கான முழுமையான கவனத்திற்கு2011 ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பொது விண்ணப்பப்படிவமும் www.commonapp. org. டிக்கின்ஸன் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (ஸ்ரீ-2)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் சபை உறுப்புரிமை விண்ணப்பம் கோரல் - 2011

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

1. அ) 31.12.2010இல் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும்
ஆ) இந்து மதத்தை சார்ந்தவராகவும்
இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநராகவும்
ஈ) இலங்கைக் குடியரசில் வழமையாகவே வசிப்ப வராகவும் இருப்பதுடன்

2. அ) நான்கு கால நித்தியபூசையில் ஏதாவதொன்றின் உபயகாரராக இருக்குமிடத்து

அல்லது

ஆ) நைமித்திய பூசையொன்றோ, உற்சவமொன்றோ, மஹோற்சவமொன்றோ ஒரு குடும்பத்தினால் அல்லது வழிபடுநர் பிரிவு அல்லது வகுப்பு ஒன்றினால் நடத்தப்படுமாயின் அக் குடும்பத்தின்/ பிரிவின்/ வகுப்பின் வயதுவந்த ஒருவரை நியமிக்கவும்

அல்லது

இ) 2, அ, ஆ வில் குறிப்பிடப்பட்ட பூசைகளில் ஏதாவதொன்றின் உபயகாரராக இருக்குமிடத்து வருடாந்த சந்தாவாக ரூபா பத்து (10/=) செலுத்துமிடத்து

அல்லது

ஈ) ஒருவர் தனது விண்ணப்பத்துடன் பொருளாளர் நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு என்னும் பெயருக்கு வருடாந்த சந்தாவாக ஐம்பது ரூபாவினை (50/=) காசுக் கட்டளை யாகவோ, அஞ்சல் கட்டளையாகவோ இணைத் திருந்தவிடத்தும்

அத்துடன்

உ) முகாமைத்திட்டத்தில் குறிப்பிட்ட படி 1 ஆவது அட்டவணையைப் பூர்த்தி செய்து எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றினை மேற்கொண்டு 31.12.2010 பி.ப 5.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற்பெட்டியில் நேரடியாகவோ செலுத்த இயலும்.

ஊ) அவர் தீயொழுக்க நடத்தையின் பாற்பட்ட குற்றம் ஒன்றிற்காக எந்தவொரு நீதிமன்றத்திலாவது குற்றத் தீர்ப்பளிக்கப்படாதவராகவும்

எ) வேதனமோ அல்லது மற்றைய கொடுப்பனவோ பெறும் கோயில் ஊழியராகவோ அல்லது குருக் களாவோ இல்லாதவிடத்தும்

ஏ) கோவிலோடு இலாபமீட்டும் தொழில் முயற்சிகளையிட்டு ஒப்பந்தங்கள் இல்லாதவரா யிருக்குமிடத்தும் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப் படுவதற்கு தகுதியுடையவராவார்.

3. வழிபடுநர் சபையின் உறுப்பினர் ஒருவர் வருடாந்த சந்தாவை 31.12.2010 இற்கிடையில் செலுத்துதல் வேண்டும். சந்தாவுடன் முகாமைத்திட்டத்தின் 2 ஆவது அட்டவணையிற் காணப்படும் படிவத்தில் தமது உறுப்புரிமைக்குரிய தகைமைகளை தாம் தொடர்ந்தும் பெற்றிருப்பதாக உறுப்பினரால் அளிக்கப்படும் உறுதி மொழி இணைக்கப்படவேண்டும்.

குறிப்பு:- மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் ஆலய முகாமைத்திட்டத்தினைப் பார்வையிடவும், அட்ட வணை 1, 2 ஆகியவற்றை ஆலய தகவல் பலகையில் பார்வையிடலாம்.

செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோவில்,
நயினாதீவு.

(சி-1760)

# இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக யாழில் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள்

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும் இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந் தினராகக் கலந்து கொள்ளவுள் ளார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் முக்கிய நிகழ்வுகள் நடை பெறவுள்ளன. இதனை முன்னிட்டு, யாழ். வீரசிங்கம் மண்டபம் ஐந்து மில்லியன் ரூபா செலவில் அலங் கரிக்கப்பட்டு வருகின்றது.

பொலிஸ், இராணுவம், கடற் படையினர் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்யும் 23 அலங்கார ஊர்திகள் அன்றைய தினம் யாழ். முற்றவெளியில் இருந்து ஆரம்பித்து நகரின் முக்கிய வீதிகள் ஊடாக வலம் வரவுள்ளதுடன் ஜனாதிபதிக்கு முப்படையினரின் அணிவகுப்பும் மரியாதையும் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண நகரின் முக்கிய வீதிகள் தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி கேரதீவு-சங்குப்பிட்டி பாலத்தையும்யாழ்ப் பாண தொழில்நுட்பக் கல்லூரியின் புதிய கட்டத்தையும் திறந்து வைக்க விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தேசிய பாதுகாப்புத் தினம் தமிழர் பிரதேசமான யாழ்ப் பாணத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
### வழிபடுநர் சபையின் பொதுக்கூட்டம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபையின் பொதுக்கூட்டம் ஏற்கனவே 07.09.2010 பத்திரி கையில் விளம்பரம் செய்தவாறு 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் ஆலய முகாமைத்திட்ட வாசகம் பிரிவு 5 தொடர்பாக சபை யினரின் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதால் 2004 இல் அங்கத்த வர்களாக அனுமதிக்கப்பட்டவர்களும் 2009, 2010 இல் உறுப்பினர்களாக சேர்வதற்கு அங்கத்துவப் பணம் செலுத் தியவர்களில் முகாமைத்திட்ட விதி 3 மற்றும் விதி 6 இல் கூறப்பட்டவாறு தகைமையுடையவர்களும் பொதுக் கூட்டத்திற்கு அனுமதிக் கப்படுவார்கள்.

தனிப்பட்ட முறையில் அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படாமையினால் இக் கூட்ட அறிவித்தலை தகை மையுடையோர் ஏற்று சமுகமளிக்கவும். இக் கூட்டம் தீவகம் தெற்கு பிரதேச செயலாளர் திரு.மு.நந்தகோபாலன் அவர் களின் தலைமையில் நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோவில், நயினாதீவு.

(சி-1761)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் கல்லூரியடி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த இராமசாமி மங்கையற்கரசி என்பவரின் 42780 2469V எனும் இலக்கத்தையுடைய் தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வருகை தந்து இதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக் கப்படுகிறது. (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவனர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படலாம்

## அவரது சட்டத்தரணிகள் தெரிவிப்பு

விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவனர் ஜூலியன் அசேஞ்ச் வயது (39). நேற்று முன்தினம் ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸாரிடம் சரண் அடைந்தார். அவர் மீதான பாலியல் வழக்குகள் குறித்து அவரிடம் சுவீடன் நாட்டு அதிகாரிகள் விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் சரணடைந்ததாக ஸ்கொட்லாந்து பொலிஸார் தெரிவித்தனர். பின்பு அவர் கைது செய்யப்பட்டார்.

விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவனர் ஜூலியன் அசேஞ்ச் மீது இந்தாண்டின் ஆரம்பத்தில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த இரு பெண்கள் தங்களை அவர் பாலியல் பலாத்காரம் செய்ததாக வழக்கு தொடுத்தனர். இக்குற்றச்சாட்டை அசேஞ்ச் மறுத்துள்ளார்.

இதையடுத்து விக்கிலீக்ஸ் இணையத்தளம் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் படைகள் ஈராக் மற்றும் ஆப்கானில் நடத்திய போர் குறித்த ஐந்து இலட்சம் இரகசிய ஆவணங்களை வெளியிட்டது.

அதன் பின் சமீபத்தில் அமெரிக்க வெளியுறவு தொடர்பான இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான இரகசிய ஆவணங்களை வெளியிட்டது. இதனால் அமெரிக்காவுக்கும் அதன் கூட்டணி மற்றும் நட்பு நாடுகளுக்கும் பலவிதங்களில் நெருக்கடி ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த மாதம் சுவீடன் நாட்டு நீதிமன்றம் ஒன்று அசேஞ்ச் மீது இரு பெண்கள் தொடுத்த பாலியல் வழக்கில் அவரை கைது செய்ய உத்தரவிட்டது. இதையடுத்து இன்டர்போல் பொலிஸ் இணையத்தளத்தில் அவரை தேடும் உத்தரவு வெளியிடப்பட்டது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவு அமெரிக்க அரசின் நெருக்கடியின் பேரிலேயே எடுக்கப்பட்டது என அசேஞ்சின் சட்டத்தரணிகள் கூறி வந்தனர். நேற்று முன்தினம் அவர் பிரிட்டன் ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸாரிடம் சரண் அடைவார் என செய்திகள் தெரிவித்தன.

இந்நிலையில் சுவீடன் அதிகாரிகள் பாலியல் வழக்கு தொடர்பாக அவரிடம் விசாரிக்க வேண்டும் என விடுத்த கோரிக்கையை ஏற்று அவர் நேற்று முன்தினம் காலை சரணடைந்தார்.

அவர் மீது இரண்டு பாலியல் பலாத்காரம் மற்றும் ஒரு கற்பழிப்பு குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என ஸ்கொட் லாந்து யார்ட் பொலிஸார் தெரிவித்தனர். பின்பு அவர் கைது செய்யப்பட்டார். சுவீடன் நீதிமன்றில் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்ட நாடு கடத்தும் வழக்கை எதிர்த்து அசேஞ்ச் சட்ட ரீதியாக போராடுவார் என அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று சுவீடனுக்கு அவர் நாடு கடத்தப்பட்டால் அமெரிக்க இரகசியங்களை வெளியிட்டதற்காக பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி அவரை எளிதில் அமெரிக்காவுக்கு நாடு கடத்திவிட முடியும் என்பதால் அவர் அதை எதிர்த்து போராட வேண்டியுள்ளதாக அவர்கள் கூறினர்.

இதுகுறித்து அவரது சட்டத்தரணி மார்க் ஸ்டீபன்ஸ் கூறுகையில்,

அவர்மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. அவர் மீதான நாடு கடத்தல் வழக்கு இன்னும் 28 நாட்களுக்குள் விசாரிக்கப்படும் என்றார். ஆகவே விக்கிலீக்ஸ் விவகாரத்தில் அவர் எப்போது கைதாகி விசாரிக்கப்படுவார் என்பது இனிவரும் நாட்களில் தெரியும். (ஸ்ரீ-4)

## மலைப்பாம்பு உட்பட 4 பாம்புகளை விமானத்தில் கடத்தியவர் கைது

இந்தோனேசியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு இடையே சென்ற எடிஹாடு விமானத்தில் பாம்புகளை ஒருவர் கடத்திச் சென்றுள்ளார். அபுதாபி விமான நிலைய அதிகாரிகள் அவர் வைத்திருந்த தோள்ப்பையை சோதனை செய்தனர். அதில் மலைப்பாம்பு உட்பட 4 பாம்புகள் இருந்தன. மேலும் அவர் வைத்திருந்த பெட்டியில் 2 கிளிகள் மற்றும் ஒரு அணில் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது. விமானத்தில் அவற்றில் ஏதாவது வெளியேறி இருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று உடன் பயணித்த பயணிகள் அதிர்ச்சியில் உறைந்தனர். எப்படி இதை பரிசோதிக்காமல் விமானத்தில் ஏற அனுமதித்தனர் என்று வியப்பு தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

## சீன நிலக்கரி சுரங்கத்தில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 13 பணியாளர்கள் பலி

சீன நிலக்கரி சுரங்கமொன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 13 பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாயுக் கசிவினால் இந்த வெடிவிபத்து இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. மத்திய சீனப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றபோது நிலக்கரி சுரங்கத்தில் 33 பணியாளர்கள் கடமையில் ஈடுபட்டிருந்ததாகவும் தெய்வாதீனமாக 20 பணியாளர்கள் உயிர் பிழைத்துள்ளனர்.

வெடிப்பு, வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற காரணிகளினால் சீன நிலக்கரி சுரங்கங்களில் பெரும் எண்ணிக்கையிலான பணியாளர்கள் உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

என்ன காரணத்திற்காக இந்த வெடிவிபத்து இடம்பெற்றதென்பது இதுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை. வெடிப்புச் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்களை தடுக்கும் நோக்கில் சீனா சுமார் ஆயிரம் சட்டவிரோத நிலக்கரி சுரங்கங்களை இந்த ஆண்டில் மூடியுள்ளது. (ஸ்ரீ-2)

## பாடல் மூலம் ஒபாமாவை மிரட்டியவருக்கு சிறை

அமெரிக்காவைச் சேர்ந்த ஜானிலோகன் ஸ்பென்சர் இணையத்தளத்தில் ஒரு கவிதை எழுதி வெளியிட்டார்.

அதில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை மறைத்திருந்து சுட்டு கொல்வது போன்று மிரட்டல் விடுத்து இருந்தார். எனவே இவரைக் கைது செய்த பொலிஸார் லூயிஸ்வில்லா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஜோசப் எச்.மெக்கின்லி குற்றவாளி ஸ்பென்சருக்கு 33 மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் தண்டனை முடிந்த பின் 3 ஆண்டுகள் இவரை பொலிஸார் கண்காணிக்கவும் உத்தரவிட்டார். முன்னதாக தான் எழுதிய கவிதைக்காக நீதிமன்றத்தில் ஸ்பென்சர் மன்னிப்புக் கேட்டார். (ஸ்ரீ-2)

## ரஜினிகாந்-லதா தம்பதிக்கு அறுபதாம் கல்யாணம்



நடிகர் ரஜினிகாந்துக்கும் அவருடைய மனைவி லதா ரஜினிகாந்துக்கும் அறுபதாம் கல்யாணம் நாளை வெள்ளிக்கிழமை போயஸ் கார்டனில் உள்ள அவர்களது வீட்டில் நடைபெறவுள்ளது. சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்துக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி 60 வயது முடிவடைந்து 61 ஆவது வயது ஆரம்பமாகிறது.

இதையொட்டி அவருக்கும் அவருடைய மனைவி லதா ரஜினிகாந்துக்கும் அறுபதாம் கல்யாணம் செய்து வைக்க குடும்பத்தினர் முடிவு செய்திருக்கிறார்கள்.

இதன்படி நாளை காலை 10 மணிக்கு நிகழ்ச்சிகள் தொடங்குகிறது. புரோகிதர்கள் மந்திரம் ஓத மங்கள வாத்தியங்கள் முழங்க ரஜினிகாந்துக்கும்-லதா ரஜனிகாந்துக்கும் அறுபதாம் கல்யாணம் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் மட்டும் கலந்து கொள்கிறார்கள். (ஸ்ரீ)

## நோபல் பரிசு வழங்கும் விழாவை சீனா உட்பட 18 நாடுகள் புறக்கணிப்பு

இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு சீனாவை சேர்ந்த லியூ ஷியாபோ (54) என்பவருக்கு அறிவிக்கப்பட்டது. சீன அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தியதற்காக இவருக்கு 11 ஆண் டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தற்போது அவர் சிறையில் உள்ளார். சீனாவுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்ட அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதை திரும்பப்பெற வேண்டும் எனவும் சீனா தரப்பில் வலியுறுத்தப்பட்டது.


ஆனால் அதை நோபல் பரிசு கமிட்டி ஏற்கவில்லை. இந்த நிலையில் நோபல் பரிசு வழங்கும் விழா நாளை ஒஸ்லோ நகரில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்கும்படி சீனா உட்பட 65 நாடுகளுக்கு தூதரகங்கள் மூலம் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது.

ஆனால் சீனா மற்றும் அதன் நட்பு நாடுகளான பாகிஸ்தான், வெனிசுலா, கியூபா மற்றும் அயல் நாடுகளான ரஷ்யா, பிலிப்பைன்ஸ், கஜகஸ்தான், சீனாவின் வர்த்தக உறவு நாடுகளான சவுதி அரேபியா, ஈரான் ஆகிய நாடுகள் இதை ஏற்கவில்லை. அழைப்பிதழை திருப்பி அனுப்பிவிட்டன

மேலும் உக்ரைன், கொலம்பியா, எகிப்து, சூடான், ஆப்கானிஸ்தான், செர்பியா, துனிசியா, ஈராக், வியட்நாம், மொராக்கோ உள்ளிட்ட 18 நாடுகள் இந்த விழாவில் பங்கேற்க முடியாது என அறிவித்து விட்டன. அழைப்பிதழ் அனுப்பப்பட்ட 65 நாடுகளில் 44 நாடுகள் நோபல் பரிசு அழைப்பை ஏற்றுக் கொண்டன.

இதற்கிடையே விழாவில் பங்கேற்க மறுப்பது ஏன் என சீனா விளக்கம் அளித்துள்ளது. இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ஷியாங் யூ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் சீனாவுக்கு எதிரான நடவடிக்கையில் சில கோமாளிகள் இறங்கியுள்ளனர். அவர்களுக்காக எங்கள் பாதையை நாங்கள் மாற்றிக் கொள்ள முடியாது என்று கூறியுள்ளார். (ஸ்ரீ-4)



போலந்து நாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட ரஷ்ய ஜனாதிபதி டிமித்ரிமெத்வடேவ்வை அந்நாட்டு ஜனாதிபதி போரிஸ்நிலோ கொமோறோஸ்கி தலைநகர் வர்சாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் வரவேற்பதை படத்தில் காணலாம்.

## ஆப்கானிஸ்தானிலிருந்து பிரி.இராணுவம் அடுத்த ஆண்டு வெளியேறும்

### பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவிப்பு

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள பன்னாட்டுப் படையில் பிரித்தானிய இராணுவமும் இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் , சமீபத்தில் விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்ட அமெரிக்கத் தூதரக இரகசியங்களில் ஆப்கானிஸ்தானில் பிரித்தானியப் படைகளின் செயற்பாடு குறித்து அமெரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் விமர்சனம் செய்து இருப்பது வெளியாகியிருந்தது.

இதைத் தொடர்ந்து பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் நேற்று முன்தினம் திடீரென ஆப்கானிஸ்தான் புறப்பட்டு சென்றார். அங்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமித் கார்சாயை தலைநகர் காபூலில் சந்தித்துப் பேசினார்.அப்போது ஆப்கானிஸ் தானில் இருந்து பிரித்தானியப் படைகள் அடுத்த ஆண்டு முதல் வெளியேறும் என தெரிவித்தார். பிரித்தானிய இராணுவம் முழுவதும் 2014 ஆம் ஆண்டிற்குள் படிப்படியாக திரும்பப் பெறப்படும் என்று தெரிவித்த அவர் இந்தத் தகவலை கர்சாயுடன் சேர்ந்து நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது அறிவித்தார். (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மறைக்க முடியாது - மில்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# 'விக்கி'-விக்கினேஸ்வரப் பெருமான் தமிழர் வினை தீர்க்க'லீக்' ஆக்கிறான்

விநாயகனுக்கு விக்கினேஸ்வரன் என்று பெயருண்டு. விக்கினங்களைத் தீர்ப்பவன் என்று அது பொருள்படும். (விக்கி+ ஈஸ்வரன்) தன்னை நம்பினோரின் வினை தீர்ப்பவன் அவன்.

எப்படி வினை தீர்ப்பான்? தன்மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கு தீங்கிழைத்தோரை தண்டிப்பதன் ஊடாக அந்த வினை களையப்படும்.

பேசாப் பெருமானாய் இருக்கும் விக்கினேஸ்வரனால் இதெல்லாம் எப்படிச் செய்யமுடியும் என்று நீங்கள் கேட்பதும் எமக்குப் புரியாமல் இல்லை.

இறைவன் ஒருபோதும் நேரில் வந்து அடியார் குறை தீர்ப்பவன் அல்ல.

தாயை இழந்த பன்றிக்குட்டிகளுக்கு தாயாகி பால் நினைந்தூட்டிப் பசி போக்கியவன் அவன்.

எனவே அவன் நேரில் வரான். இயற்கையாக- செயற்கையாக- இணையத்தளத்தினூடாக- பதவி மோகத்தினூடாக- அகந்தை ஊடாக இப்படி எத்தனையோ வடிவங்களை அவன் எடுத்து அவரவர் கெடுதிக்கேற்ப தண்டனை கொடுத்து தன் அடியார் குறை தீர்ப்பான்.

ஓ! அப்படியா? அப்படியானால், ஈழத் தமிழர்கள் தாம் பட்ட துன்பங்களின் போதெல்லாம் விக்கினேஸ்வரா!... விக்கினேஸ்வரா!... இந்தக் கொடூரத்தை தீராயோ- உலகறியச் செய்யாயோ என்று வேண்டினரே அதற்கு விக்கினேஸ்வரன் என்ன செய்தான் என்று உங்கள் நா முணுமுணுப்பதும் கேளாமலில்லை.

உங்கள் கேள்விக்கான பதிலைத்தான் இங்கு கூறவந்தோம்.

ஆம். விக்கிலீக்ஸ் என்ற இணையத்தளம் இப்போது வன்னி யுத்தம் தொடர்பில் முக்கியமான விபரங்களை வெளிப்படுத்தி வருகிறது.

விக்கிலீக்ஸ் வெளியிடும் தகவல்களால் இலங்கை பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

எவரும் எதிர்பார்க்காத வகையில், வன்னியுத்தம் தொடர்பில் விக்கிலீக்ஸ் பல்வகைச் செய்திகளை உலகம் முழுவதும் பரப்புவது எம்மைப் பொறுத்தவரை அவன் செயலே.

எதுவாயினும் விக்கிலீக்ஸின் அதிரடித் தகவல் வெளியிடுகையில் இந்தியாவின் புட்டுக்கட்டுக்களும் வெளிவருவதுதான் அதன் மகிமை.

அதுமட்டுமா என்ன? இலங்கை தொடர்பில் அமெரிக்கத் தூதரகம் அனுப்பிய விபரங்கள் வெளியாகியிருப்பதும் அந்த விக்கினேஸ்வரன் விக்கிலீக்ஸ் ஊடாக 'லீக்' ஆக்கிவிட்டான் என்பதே பொருள்.

ஓ! தெய்வம் நின்றறுக்கும். பொறுத்திருந்து பார்ப்போம்.

ஆனால் ஒன்று. வன்னி யுத்தத்தில் இந்திய தேசம் மிகப்பெரும் போர்க்குற்றவாளியாகவும் உலக நாடுகள் அதனைக் கண்டிப்பதாகவும் நிலைமை மாறும்.

இந்த மாற்றத்தால் இந்தியாவின் பஞ்சசீலக் கொள்கையும், ஜனநாயகப் புகழும் கருகிப்போவது தவிர்க்கமுடியாததே.

காலம் பிழைத்தால் கறுத்தார் மட்டுமல்ல எவரும் எதுவும் செய்யமுடியாது.

ஓ! விக்கினேஸ்வரா! உன் விளையாட்டை நீ காட்டு. நாங்கள் விக்கிலீக்ஸைப் பார்ப்பம்.

அட! இதற்கெல்லாம் 'ஹோட் சிவா' கவலை கொள்ளற்க. உன் நெற்றிக்கண்தானே சனல் 4 என்று ஏற்கெனவே கூறிவிட்டோம். இருவரும் சேர்ந்தால் எங்கள் விக்கினங்கள் தீரும்.

# கொழும்புத் துறைமுகத்தில் வெளிநாட்டுப் போர்க்கப்பல்கள்

(கொழும்பு)

இலங்கை கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகளைச் சேர்ந்த எட்டு போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

பங்களாதேஷ், சீனா, ஈரான், இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் எட்டுப் போர்க் கப்பல்கள் நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததாக பாதுகாப்புத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இக் கப்பல்களில் வந்த சுமார் 300 முதல் 400 வரையான அதிகாரிகளுக்கும் 2 ஆயிரத்து 500 மாலுமிகளுக்கும் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து கடற்படையினரால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இப் போர்க்கப்பல்கள் இன்றுமுதல் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை காலிமுகத்திடலுக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் இலங்கை கடற்படைக் கப்பல்களுடன் இணைந்து பயிற்சி ஒன்றில் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பல்வேறு நாடுகளின் கடற்படைத் தளபதி மற்றும் உயர்நிலை அதிகாரிகளும் சிறிலங்கா கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக கொழும்பு வந்துள்ளனர்.

அவுஸ்திரேலிய கடற்படைத் தளபதி, பங்களாதேஷ் கடற்படைத்தளபதி மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசு, பிரான்ஸ், ஈரான் ஆகிய நாடுகளின் கடற்படை பிரதிநிதிகள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (ச-5)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு பாடசாலையின் திறந்தவெளி அரங்கில் கிறிஸ்தவ மாணவர் மன்றத் தலைவர் வி.அனோஜன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு செ.யூட் நிக்ஷன் கலந்து கொள்ளவுள்ளார். (ச-7)

# பிரிட்டனில் ஏற்பட்ட அவமானத்தை திசை திருப்பும் நோக்கில் அரசாங்கம் எம்மீது குற்றஞ்சாட்டுகிறது

## கரு ஜயசூரிய எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவில் ஏற்பட்ட அவமானத்தை திசை திருப்பும் நோக்கில் அரசாங்கம் தம்மீது நம்பிக்கை இல்லா பிரேரணையை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஒக்ஸ்போர்ட் ஒன்றிய உரை இரத்து செய்யப்பட்டமையினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நெருக்கடியான நிலைமையிலிருந்து விடுபடும் நோக்கில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அண்டை நாடான இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய நபருக்கு அரசாங்கம் அடைக்கலம் வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளர்.

குறித்த குற்றவாளியை நாடு கடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக அவர் தெரிவித்துள்ள அவர் காவல்துறையையும் இராணுவத்தினரையும் படுகொலை செய்த நபர்களுக்கு அரசாங்கம் பதவிகளை வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் நிலைப்பாடு வெட்ட வெளிச்சமாகியுள்ளதெனவும் யுத்த வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் பாடுபட்ட சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்த அரசாங்கம் புலிகளின் முன்னாள் சர்வதேச வலையமைப்பு பொறுப்பாளர் குமரன் பத்மநாதனுக்கு சொகுசு வாழ்க்கை அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் வார இறுதி ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு தாம் அளித்த செவ்வியை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என தெரிவித்துள்ள அவர்,

நாட்டில் நல்லாட்சி மற்றும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டுமாயின் சர்வதேச ரீதியில் இலங்கை தொடர்பில் நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானதெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



அரசியல் பிரச்சினைக்கு உண்மையான தீர்வுத் திட்டங்களை வழங்குவதன் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கை தொடர்பான நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும் என அவர் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய நாடுகளில் இலங்கைத் தூதுவராக தாம் கடமையாற்றியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# பகவானின் ஆசீர்வாதம்

ஆண்டுதோறும் யூலை மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவதரித்த புட்டபர்த்தியில் சாயி இளைஞர் சேவைக்கான நிகழ்வு நடைபெறும். இச்சேவையின் நோக்கம் நடந்தது நடந்ததாக இருக்க, இனிமேல் நடக்கப் போவது நல்லதாக நடக்க வேண்டும் .அதற்கு உகந்தவர்கள் இளைஞர்கள். எனவே சுவாமி இளைஞர்களை நீதி , தர்ம, தியாக வழியில் வரவேற்று வழி நடத்தவே இந்த இளைஞர் சேவை வலுப்படுத்தப்படுகின்றது. இதற்கு உலகெங்குமுள்ள 175 இற்கு மேற்பட்ட நாடுகள் பங்கு கொள்கின்றன.

இலங்கை அடியார்களுக்கான சந்தர்ப்பம் இவ்வருடம் கடந்த செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரையும் வழங்கப்பட்டது. இலங்கையிலிருந்து தொளாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் ,சிங்கள ,சாயி அடியார்கள் புட்டபர்த்திக்கு யாத்திரை மேற்கொண்டனர். இவ்வடியார்களில் அடியேனும் ஒருவன்.

12 நாட்கள் புட்டபர்த்தி பிரசாந்தி வளாகத்தில் தங்கியிருந்தோம். இதில் 10 நாட்கள் எல்லாம்வல்ல சாயி தெய்வத்தின் தரிசனம் கிடைக்கப்பெற்றோம். புதிதான எனக்கு விசேடமாகவும், பல தடவை சுவாமியைத் தரிசனம் செய்தவர்களுக்கு சாதாரணமாகவும் அமைந்தது சுவாமியின் அழகு. சுவாமியின் வசந்த ஆலயத்திலிருந்து சுவாமி எழுந்தருளும் பிரசாந்தி நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் சுமார் 200யார் இருக்கும் . இவ்விடைப்பட்ட தூரத்தில் சுவாமி எழுந்தருளும் போது சுவாமியின் அழகு வதனமும், அவரின் அருள் விழிகளும் எம்மை நோக்குவதாக எமக்குப் புலப்படும். இது பெரும் அற்புதமாகும்.

பிரஷாந்தி வளாகத்தில் மூன்று உணவகங்கள் உண்டு. மேலைத்தேய, வட இந்திய , தென்னிந்திய உணவகங்களாகும். மூன்று உணவகங்களிலும் உணவு வகைகள் வேறுபடும். அதன் விலைகளிலும் சிறு வித்தியாசம் காணப்படும். ஆனால் தென்னிந்திய உணவகம் ஒரு அன்னதான சத்திரம் எனலாம். இங்கு ஒரு மதிய உணவு இந்தியப் பணத்தில் ஆறு ரூபா ,அத்துடன் பகவானால் ஆசீர்வதிக்கப்பட்ட உணவும் இங்கேதான். எனக்கு மூன்று வேளை ஆகாரமும் இங்கேதான். பல வருடங்க ளாக எனக்கு அமீதிசி யஷ் எனும் உபாதை இருந்து வந்தது. எண்ணெய், உறைப்பு, பால் போன்றவை உட் கொண்டால் வயிற்றில் குழப்பம் ஏற்படும். இது பெரும் தொந்தரவாக இருந்தது. இதற்கு கைக்கொள்ளாத வைத்தியம் இல்லை எனலாம். எமற்றின், ஈ.வி.எஸ்,பிளைஜில் என்பவற்றோடு ஆயுள்வேத செந்தூரம் முற்கொண்டு வைத்தியம் செய்தாயிற்று பலன் ஏதுமில்லை. ஆனால் இப்பொழுது பகவானால் ஆசீர்வதிக்கப்பட்ட உணவினை உண்டபின் அந்த நோய் இருந்த இடம் தெரியாது ஓடிவிட்டது. அந்த நினைப்பே அடியோடு ஒழிந்து விட்டது . இதனைக் கூறுவதன் நோக்கம் நீங் களும் சாயி தெய்வத்தை வணங்குங் கள். உங்கள் குறைகள் எல்லாம் தீர்த்து வைப்பார். இது மதம் சார்ந்த பரப் புரையல்ல. பகவான் பாபா சர்வ மதப் பிரியன்.



சிவனும் அவரே விஸ்ணுவும் அவரே!
இயேசுவும் அவரே! புத்தரும் அவரே!
அல்லாவும் அவரே!

ஜெய் சாய்ராம் யாதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் பார்வையற்றோர் கௌரவிக்கப்பட்ட நிகழ்வில் பார்வையற்றோர் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதனையும் லயன்ஸ் தலைவர் லயன் தி. முருகதாஸ் முன்பு அங்கத்தவர்கள் சத்தியப்பிரமாணம் செய்வதையும் கலந்து கொண்ட பார்வையற்றோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# இறுதி யுத்தத்தில் பெற்றோரை இழந்த மாணவர்களின் கல்விச் செலவு முழுவதையும் அரசு ஏற்க வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

வன்னி மாவட்டத்திலுள்ள பல கல்வி நிறுவனங்கள் இன்னமும் இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்படாததால் மாணவர்களின் கல்வி நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இறுதியுத்தத்தின் போது தாய், தந்தையரை இழந்த ஆயிரத்து 700 மாணவர்களின் முழுக் கல்விச் செலவினையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற வரவு- செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

வன்னியில் தற்போது தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. இதனால் இடம்பெயர்ந்த பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் தற்காலிக பாடசாலைக் கொட்டில்களிலும் சீமெந்து தரை இல்லாத பாடசாலைக் கொட்டில்களிலும் இருந்து கொண்டு மிகுந்த சிரமத்தின் மத்தியில் தமது கல்வியைத் தொடர்கின்றார்கள். க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை வர விருக்கும் வேளையில் இந்த அவலம் ஏற்பட்டுள்ளது.

மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களிலுள்ள பல பாடசாலைகள் கூரை இன்றியும் சீமெந்துத் தரைகள் இன்றியும் காணப்படுகின்றன. சில பாடசாலைகள் இராணுவத்தினர் வசம் உள்ளன. இன்னும் சில பாடசாலைகள் தடுப்பு முகாம்களாகச் செயற்படுகின்றன.

ஓமந்தை மத்திய கல்லூரியைச் சேர்ந்த 520 மாணவர்களும் 26 ஆசிரியர்களும் ஏ-9 வீதிக்கு அருகில் உள்ள தற்காலிக இடமொன்றில் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்கின்றனர். வவுனியா மகா வித்தியாலயத்தில் 3 ஆயிரத்து 500 மாணவர்களும் 35 ஆசிரியர்களும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நிலையில் அந்த இடம் தற்போது தடுப்பு முகமாக உள்ளது.

அங்கு கற்றவர்கள் தற்காலிக இடத்தில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நெடுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி இயங்க முடியாத நிலையில் இருப்பதால் மாணவர்கள், விரிவுரையாளர்கள் சிரமப்படுகின்றனர். வருகைதரு விரிவுரையாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படாத நிலைமை காணப்படுகின்றது. பம்மைமடு வளாக மாணவர் விடுதியும் இராணுவ முகாமாக உள்ளது.

வன்னி மாவட்டத்திலுள்ள பல கல்வி நிறுவனங்கள் இன்னமும் இராணுவத்தின் பிடியில் உள்ளன. இதனால் மாணவர்களின் கல்விநிலை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 6 தொடக்கம் 11 வரையான வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் தமிழ் மன்னர்களின் வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டும் இருட்டிப்புச் செய்யப்பட்டும் உள்ளன. இந்த நாட்டை ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்களை அறிந்து கொள்ளும் உரிமை எவ்வாறு சிங்கள மாணவர்களுக்கு உண்டோ அதேபோல் தமிழ் மன்னர்களின் வரலாறுகளை அறிந்து கொள்ளும் உரிமை தமிழ் மாணவர்களுக்கு உண்டு.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் ஆயிரத்து 700 மாணவர்கள் தமது தாய், தந்தையரை இழந்து விட்டு இன்று அநாதை இல்லங்களிலும் உறவினர் வீடுகளிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கான முழுச் செலவையும் அரசு ஏற்கவேண்டும். மாதாந்தக் கொடுப்பனவாகவோ அல்லது வேறு வழிகளிலோ இதனை வழங்க வேண்டும்.

வன்னி மாவட்ட ஆசிரியர்களுக்கான கடன் திட்டங்களில் தாமதம் காண்பிக்கப்படுகின்றது, ஊக்குவிப்புகள் வழங்கப்படுவதில்லை, கஷ்டப் பிரதேசங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை.

பல வருடங்களாகத் தொண்டராசிரியர்களாகக் கடமை புரிவோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். பலர் 10 வருடங்கள் கூட தொண்டராசிரியர்களாக உள்ளனர். இவர்கள் விடயத்தில் கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத கசிப்பு, மதுபான உற்பத்தி தொடர்பில் அதிகளவான வழக்கு

(கரவெட்டி)

வடமராட்சியிலுள்ள மூன்று பொலிஸ் பிரிவுகளுக்கும் உட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோதமான கசிப்பு மற்றும் மதுபான உற்பத்தி அதிகரித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இக்குற்றச் சாட்டின் பேரில் அதிகளவான சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீது பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் அதிக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இதற்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கியதுடன் பத்திரிகைகளில் வெளிவந்த இது தொடர்பான செய்திகள் மக்களை விழிப்படையச் செய்தது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். எனவே, இதுபோன்ற சம்பவங்கள் இடம் பெற்றால் தமக்கு அறிவிக்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-24)


# ஆபாச வீடியோக்களுடன் ஜெர்மனியர் கைது

ஜெர்மனிய நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் ஆபாச வீடியோக்கள் நான்குடன் மாத்தறை மாவட்டத்தில் மிரிஸ்ஸ பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதிக்கு அருகில் வசிக்கும் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்துப் பொலிஸார் இவரைக் கைது செய்து உள்ளனர். அத்துடன் இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# பிரித்தானியாவின் நீதிமன்ற விவகாரங்களில் இலங்கையில் போன்று அரசு தலையிட முடியாது

## ஐ.தே.க.எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

லண்டனையும் கொழும்பைப் போன்று நினைத்து செயற்படக் கூடாது எனவும் பிரித்தானிய நாட்டின் நீதிமன்ற விவகாரங்களில் இலங்கையில் போன்று அரசாங்கத்தினால் தலையீடு செய்ய முடியாதெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் லண்டன் விஜயம் உரிய முறையில் திட்டமிடப்படாது மேற்கொள்ளப்பட்டுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஜனாதிபதி லண்டனுக்கு விஜயம் செய்தால் நெருக்கடியான நிலைமை ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் வெளிவிவகார அமைச்சு இது குறித்து கவனம் செலுத்த தவறியதாக அவர் தெரிவித்துள்ளார்.

லண்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி லண்டன் கிளைத் தலைவர் ஆகியோர் இந்த விஜயம் குறித்து எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் யார் இந்த விஜயத்தை ஒழுங்கு செய்ததென அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்ற உத்தரவு பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டதாகவும் இவ்வாறான ஓர் சூழ் நிலையில் யார்? ஜனாதிபதியை நெருக்கடியான நிலைக்கு இட்டுச் சென்றதென அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இதன் பின்னணியில் ஆளும் கட்சிக்குள் ஏதேனும் சூழ்ச்சித் திட்டங்கள் காணப்படுகின்றனவா என ஆராயப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கருத்து முரண்பாடு காணப்பட்டாலும் ஜனாதிபதி இந்த நாட்டின் அனைத்து மக்களுக்குமே ஜனாதிபதி எனவும் அவரை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

லண்டனையும் கொழும்பைப் போன்று நினைத்து செயற்படக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். அந்த நாட்டின் நீதிமன்ற விவகாரங்களில் இலங்கையில் போன்று அரசாங்கத்தினால் தலையீடு செய்ய முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி லண்டனுக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் வெளிவிவகார அமைச்சர் லண்டனுக்கு விஜயம் செய்ததாகவும் இதனை விடவும் முன் எச்சரிக்கையாக செயற்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அழுத்தங்கள் ஏற்படும் என்பதனை அறிந்திருந்த போதிலும் ஜனாதிபதி துணிச்சலுடன் லண்டன் விஜயத்தை மேற்கொண்டதாக வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் சீன யுத்தக்கப்பல்

சீன ஏவுகணை நாசகாரியான லன் சௌவ் இலங்கைத் துறைமுகத்திற்கு ஐந்து நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு வந்துள்ளது.

ஏடன்குடா, சோமாலியா கடல் ஆகிய இடங்களில் ஐந்துமாத காலமாக பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த நாசகாரியான லன் சௌவ் இலங்கை கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பங்கு கொள்வதற்காக கொழும்புக்கு வந்துள்ளது.

அத்துடன் இவ்விழாவில் பங்கேற்பதற்காக இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்தும் யுத்தக்கப்பல்கள் நேற்று முன்தினம் இலங்கைத் துறைமுகத்தை வந்தடைந்தன.

இலங்கை கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூசுப் பதான் அடித்தார் சதம்; இந்தியாவுக்கு அடுத்த வெற்றி

## நியூசிலாந்து அணிக்கு தொடரும் சோகம்

(பெங்களூர்)

யூசுப்பதானின் அதிரடிச் சதத்தின் மூலம் இந்திய அணி 05 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி மூன்று டெஸ்ட், 05 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இந்திய அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்நிலையில் தொடர்ந்து நடைபெற்ற முதல் மூன்று ஒருநாள் போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இத் தொடரில் நான்காவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் பெங்களூரில் நடை பெற்றது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் கௌதம் காம்பீர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு குப்தில்- மக்குலம் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 8.4 ஓவர்களில் 62 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது குப்தில் 25 பந்துகளில் (05 பவுண்டரிகள் உட்பட) 30 ஓட்டங்களை எடுத்து நெகராவின் பந்தில் யுவராஜ் சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஹவ் 04 ஓட்டங்களுடன் நெகராவின் பந்தில் ஆட்டமிழந்து வந்த வேகத்திலேயே அரங்கு திரும்பினார்.

தொடர்ந்து வந்த ரெய்லர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் பிரன்டன் மக்குலம் 42 பந்துகளில் (08 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 42 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 13.2 ஓவர்களில் 91 ஓட்டங்களை எடுத்து 03ஆவது விக்கெட்டையிழந்தது.

இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த ரெய்லர்- ஸ்ரைரிஸ் ஜோடி சிறப்பாக ஆடி நம்பிக்கையளித்தனர்.

இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 16.2 ஓவர்களில் 79 ஓட்டங்களை எடுத்தபோது ஸ்கொட் ஸ்ரைரிஸ் 48 பந்துகளில் (03 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய பிராங்லின் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட நியூசிலாந்து அணி 35.5 ஓவர்களில் 200 ஓட்டங்களைத் தாண்டியது.

மறுமுனையில் ரெய்லர் 73 பந்துகளில் (03 பவுண்டரிகள் உட்பட) 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் பிராங்லினின் அதிரடி ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களையிழந்து 315 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிராங்லின் 69 பந்துகளில் (12 பவுண்டரிகள், 03 சிக்ஸர்கள் அடங்கலாக) 98 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார்.

பந்துவீச்சில் யூசுப் பதான் 03 விக்கெட்டுக்களையும், அஸ்வின், நெகரா ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 316 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு காம்பீர்- பட்டேல் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் ஆறு ஆண்டுகளின் பின் சர்வதேசப் போட்டிகளில் இடம்பிடித்த பார்த்திப் பட்டேல் சிறப்பான ஆட்டத்தை வழங்கினார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய அணித்தலைவர் காம்பீர் 24 பந்துகளில் (04 பவுண்டரிகள் உட்பட) 27 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய விராட் ஹோலி பூச்சியத்துடன் ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணி 68 ஓட்டங்களை எடுத்து 02 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து யுவராஜ்சிங் களமிறங்க மறுமுனையில் பார்த்திப்பட்டேல் 50 பந்துகளில் அரைச்சதம் பெற இந்திய அணி 17 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதில் யுவராஜ் சிங் 20 ஓட்டங்களுடனும் பார்திப்பட்டேல் 57 பந்துகளில் (08 பவுண்டரிகள் உட்பட) 53 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 19.3 ஓவர்களில் 108 ஓட்டங்களை எடுத்து 04 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து 05-வது விக்கெட்டுக்காக இணைந்த ரோகித் சர்மா- யூசுப்பதான் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கி இந்திய அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இந்த ஜோடி 05-வது விக்கெட்டுக்காக 13.5 ஓவர்களில் 80 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது ரோகித் சர்மா 48 பந்துகளில் (04 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து திவாரி களமிறங்க மறுமுனையில் யூசுப்பதான் 50 பந்துகளில் தனது அரைச்சதத்தை பெற்றார்.

இந்நிலையில் இந்திய அணி 36 ஓவர்களில் 05 விக்கெட்டுக்களையிழந்து 203 ஓட்டங்களை எடுத்தபோது மழை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

அரைமணி நேரத்தின் பின்னர் ஆட்டம் ஆரம்பமானபோது யூசுப்பதான் சிக்ஸர் மழை பொழிந்து இந்திய அணியை மீட்டெடுத்தார்.

யூசுப்பதான் அதிரடியாக ஆட மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஒத்துழைப்பு வழங்கினார் திவாரி.


இதில் யூசுப் பதான் 79 பந்துகளில் தனது முதலாவது ஒருநாள் சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார்.

இறுதியில் திவாரி சிக்ஸர் அடித்து அசத்த இந்திய அணி 48.5 ஓவர்களில் 05விக்கெட்டுக்களையிழந்து 321 ஓட்டங்களைக் குவித்து 05 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் யூசுப் பதான் 96 பந்துகளில் (07 பவுண்டரிகள், 07 சிக்ஸர்கள் அடங்கலாக) 123 ஓட்டங்களையும், திவாரி 39 பந்துகளில் (03 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 37 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் மைக்கே, நாதன் மக்குலம் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும், சௌத்தி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் சதமடித்து இந்திய அணியின் வெற்றிக்கு திருப்புமுனை அமைத்த யூசுப்பதான் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.



இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 05 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 4:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான 05-வது மற்றும் இறுதியுமான ஒருநாள் போட்டி நாளை சென்னையில் நடைபெறுகின்றது.

---

## ஐ.நா.- ஐரோ.ஒன்றியம்...

இலங்கை மக்களின் நீண்ட மற்றும் குறுகிய காலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் திட்டங்களை ஐக்கிய நாடுகள் சபையும், ஐரோப்பிய ஒன்றியமும் கூட்டாக இணைந்து மேற்கொண்டு வருவதாக இவ்விரு அமைப்புக்களும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கடந்த 05 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அவசரகால, மீள் கட்டுமான, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திகளுக்கான உதவிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் 83 மில்லியன் யூரோக்களை ஐக்கியநாடுகள் சபையின் தொண்டர் அமைப்புக்களுக்கு வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செய்திகளின் பிரகாரம் 27 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் தான் ஐக்கியநாடுகள் சபையின் தொண்டு நிறுவனங்களுக்கு அதிகளவில் நிதியை வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான உதவிகளை இவ்விரு அமைப்புக்களும் இணைந்து தொடர்ந்து வழங்கிவரும் என இவ்விரு அமைப்புக்களினதும் சார்பில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பின்னரான மீள் கட்டுமானப் பணிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய நிதியையும் ஐக்கியநாடுகள் சபையே கண்காணித்து வந்தது. போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்திலும், மாத்தறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடனான மீள் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விரு அமைப்புகளும் இணைந்து செயற்பட்டதால் மக்களுக்கு அதிகளவு நன்மைகள் சென்று சேர்வதற்கு வழி வகுத்துள்ளது. இவ்வாறு மக்களுக்கு தொடர்ந்தும் சிறந்த முறையில் சேவையாற்ற தயாராகவுள்ளதாக இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் உட்கட்டுமான அபிவிருத்தி, வாழ்விடம், கல்வி, வாழ்வாதாரம், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள், சுற்றுச்சூழல், உணவுப் பாதுகாப்பு போன்ற துறைகளை மேம்படுத்துவதற்காக ஐக்கியநாடுகள் சபையும் ஐரோப்பிய ஒன்றியமும் கடந்த பல வருடங்களாக இணைந்து பணியாற்றி வருகின்றன.

கண்ணிவெடி அபாயம் குறித்த கல்வி, சுகாதார மற்றும் கல்விக்கான வசதி வாய்ப்புக்கள், நீர் மற்றும் மலசல கூட வசதிகளின் மேம்பாடு, வாழ்வாதார அபிவிருத்தி ஆகிய விடயங்களில் நீண்ட கால அடிப்படையில் இலங்கையில் தொடர்ந்தும் நாங்கள் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றோம்.

இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதோடு அவர்களின் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் போருக்குப் பின்னரான காலப் பகுதியில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் ஆவலாய் உள்ளோம் என ஐக்கியநாடுகள் சபையும், ஐரோப்பிய ஒன்றியமும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

---

## கிளி.மத்திய கல்லூரியில் பாராட்டு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் 2008, 2009 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை 10 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் முன்னாள் அதிபரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான இரத்தினகுமார், கிளிநொச்சி வலயக் கல்வி ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளரான சி.கணேசலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (ச-7)

---

## தமிழ் மக்கள்...

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் தமிழ் மக்கள் தங்கள் பாதுகாப்புக்காகத்தான் ,ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டார்கள் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும் என ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கரு ஜெயசூரிய தற்போது யுத்தம் முடிந்து விட்டதால் அவசரகாலச் சட்டம் தேவையில்லை எனக் கூறினார்.

எதிர்க்கட்சிகளின் ஜனநாயக அரசியல் செயற்பாடுகள் மற்றும் ஊடகவியலாளர்களை ஒடுக்குவதற்கு அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார். (ச-5)

---

## சிறுவர்கள் இருவரும் நேற்று மீட்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியில் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படும் பாடசாலைச் சிறுவர்கள் இருவர் நேற்று பிற்பகல் யாழ்.நகரப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் நின்ற இவர்கள் தொடர்பில் அப்பகுதி வர்த்தகர் ஒருவர் குடும்பத்தினருக்கு தகவல் வழங்கினார். பின்னர் குடும்பத்தினரால் மீட்கப்பட்ட இச் சிறுவர்கள் சுன்னாகம் பொலிசாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் உறவினர் ஒருவருவரின் உதவியுடன் திருகோணமலைக்குச் சென்று திரும்பியதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

---

## கிணற்றுக்குள் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா சாஸ்திரி கூழாங்குளத்தைச் சேர்ந்த 6 வயது சிறுவன் நேற்றையதினம் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இது குறித்து தெரிய வருவதாவது, முன் பள்ளிக்குச் சென்றுவிட்டு வீடுதிரும்பிய சிறுவன் தனது நண்பர்களுடன் விளையாடிவிட்டு கை கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்றவேளையில் தவறி விழுந்துள்ளார்.

மாரிகாலமாகையால் கிணற்றில் நீர் மட்டம் அதிகரித்துக் காணப்பட்டுள்ளமையால் இரண்டு மணி நேரமாக கிணற்றுநீர் வெளியேற்றப்பட்ட பின்னே சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட சிறுவன் அதேயிடத்தைச் சேர்ந்த நாகேந்திரராசா நிஷாத் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

---

## அவசரகால...

தேசியக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு எதிராக வாக்களித்தன. ஆளும் கட்சியும், அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் ஏனைய சிறுபான்மையினக் கட்சிகளும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன. (ச-5,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு திரும்பியது...

புறப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மலேசியா ஊடாக கொழும்பு செல்வதாக இருந்தது.

மலேசியா செல்வதை தவிர்க்க விரும்பிய ஜனாதிபதியும் அவரது குழுவினரும் தமது செல்வாக்கை முழுமையாக பயன்படுத்தி விமானத்தை மலேசியா செல்லாமல் கொழும்புக்கு கொண்டு செல்லும் முயற்சிகளில் ஈடுபட்ட போது விமானத்திலிருந்த வெளிநாட்டவர்கள் பெரும் குழப்பம் அடைந்திருந்ததாக கூறப்படுகின்றது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானங்கள் பொதுவாக் லண்டனிலிருந்து கொழும்புக்கான தமது பயணத்தை மலேசியா ஊடாகவே மேற்கொண்டு வருகின்றமை வழமையாகும்.

இந் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கண்டிப்பான உத்தரவையடுத்து விமானம் லண்டனிலிருந்து நேரடியாக கொழும்பை வந்தடைந்தது.

இக் குறிப்பிட்ட விமானத்தின் மார்க்கம் திடீரென மாற்றப்பட்டமையினால் விமானத்திலிருந்த பயணிகள் பெரும் குழப்பமடைந்தனர்.

லண்டனிலிருந்து மலேசியாவுக்கான பயண நேரம் பத்து மணித்தியாலமாக இருக்கின்ற போதிலும் கொழும்பினூடாக மலேசியா செல்வதாயின் ஐந்து மணித்தியாலங்கள் மேலதிகமாக தேவைப்படும் என்பதாலேயே மலேசியா செல்லவிருந்த விமானப் பயணிகள் குழப்பமடைந்திருந்தனர். இது தொடர்பில் தமது எதிர்ப்பையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

இந்நிலையில் ஆளும் தரப்பு நாடாளுமன்றஉறுப்பினர்சஜித்வாஸ்குணவர்த்தனவை, தொடர்பு கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மலேசியாவுக்கு பயணம் செய்யும் பயணிகள் அனைவருக்கும் அவர்களுடைய பயணக் கட்டணத்தில் 50 சதவீத கழிவை வழங்குவதுடன் தேவையான உணவுப் பொருட்களையும் குடிபானங்களையும் பயணத்தின்போது வழங்குமாறு உத்தரவிட்டார். இதன் மூலம் பயணிகள் சமாதானப்படுத்தப்பட்டனர்.

இக்குழுவினரும் அவசரமாக கொழும்பைச் சென்றடைந்த போதிலும் அவர்களுடைய பயணப்பொதிகள் அனைத்தும் நான்கு நாட்களின் பின்னரே மலேசியாவிலிருந்து வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

# இலங்கை இனப்பிரச்சினை...

என்பது இலங்கையைப் பொறுத்த விடயமாகும். இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வின் கீழ் உரிய தீர்வு காணப்பட்டால் அதனை இந்தியா மனப்பூர்வமாக வரவேற்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

புதுடில்லியில் நடைபெற்ற இலங்கை தேசிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடக பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே சிவ்சங்கர் மேனன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உலக ஒழுங்குகளுக்கு ஏற்ப எந்தவொரு நாடும் தனித்து இயங்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அந்தவகையில் இலங்கையுடன் மிகவும் அந்நியோன்ய உறவினை இந்தியா கொண்டுள்ளது. தீர்வு தொடர்பில் எதுவித அழுத்தங்களையும் இந்திய வழங்காது.

இலங்கை தான் தனது நாட்டு பிரச்சினைக்கு தீர்வினைக் காணவேண்டும். இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஆலோசனைகளை வழங்க இந்தியா தயாராகவே உள்ளது. அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதார அபிவிருத்தி என்பவற்றை காண்பதற்கு இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு முன்வைக்கப்படுவது அவசியமாகும்.

இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வினை முன்வைப்பதா? அல்லது அதற்கு மேலதிகமாக சென்று தீர்வு காண்பதா? என்பது குறித்து இலங்கை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவுள்ளதாக தெரிவித்திருந்தார்.எனவே இலங்கை அரசாங்கமே இது குறித்து தீர்மானிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் மீளவும் உருவாகும் சந்தர்ப்பம் இருக்கின்றதா என்பது குறித்து கூறுவதற்கில்லை.தற்போதைய சூழலில் அதற்கான சூழ்நிலையில்லை.இந்த விவகாரம் இலங்கையைப் பொறுத்த விடயமாகும். இந்திய மண்ணில் இலங்கைக்கு எதிராக எந்தசக்தியும் உருவாவதற்கு இந்தியா இடமளிக்கமாட்டாது என்றார். (ச-5)

# அமெரிக்கா மீது...

தமது நாட்டின் குவீன்ஸ்லாந்து மாகாணத்தில் பிறந்தவரான விக்கிலீக்ஸின் தோற்றுநர் ஜூலியன் அசான்ச்சை இவ்விவகாரம் தொடர்பில் அதிகம் விமர்சித்தே வந்துள்ளது. அவர் கொஞ்சமும் பொறுப்பில்லாமல் செயல்பட்டுள்ளார் என்று நாட்டின் தற்போதையப் பிரதமர் ஜூலியா கில்லார்ட் குற்றம் சாட்டியிருந்தார்.

ஆனால் ஜூலியாவுக்கு முன்பாக இவ்வாண்டின் முற்பகுதி வரையில் பிரதமராக இருந்தவரானதற்போதையவெளியுறவுஅமைச்சர்கெவின் ரூட், அசான்ச்சுக்கு ஆதரவான ஒரு கருத்தாக தோன்றும்ஒருவிஷயத்தை தற்போது கூறியுள்ளார்.அமெரிக்க அரசாங்கத்தில் இப்படியான ரகசியத் தகவல்களைப் பேணுவதில் உள்ள பாதுகாப்பு போதுமானதுதானா என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இப்படியான ரகசியத் தகவல்களைப்பார்க்க நெடுங்காலமாக யார்யாருக்கெல்லாம் அனுமதி இருந்துவந்துள்ளதுஎன்பதை கவனிக்க வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-5)

# மீண்டும் பற...

இனங்காணப்பட்டுள்ளனர்.நோய் தொற்றும் வீதமும்அதிகரித்துள்ளதால்தொற்றுஏற்படும் சாத்தியக்கூறும் அதிகம் உள்ளது. எனவே காவல்துறையினர், பாதுகாப்புப் படையினர், கடற்படையினர், கோழிப்பண்ணையாளர்கள், மக்களுடன் அதிகமாக தொடர்புபடுபவர்கள் மற்றும் சகலவியாபார நிலைய ஊழியர்களும் தமது பிரிவிலுள்ளசுகாதாரவைத்திய அதிகாரி பணிமனைக்கு சென்று எதிர்வரும் 20ஆம் திகதிக்குமுன்னர்அதற்கானதடுப்பூசியைபெற்றுக்கொள்ளவேண்டும் என்றுள்ளது.(ச-5)

# 'லண்டன்...

அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தனிப்பட்ட அழைப்பின்பேரில்நான் லண்டன் சென்றிருந்தேன்.லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்புமில்லை.

அரசாங்கம் தனது முட்டாள்தனத்தைக் காட்டிக்கொள்ள விரும்பாமல் என்னையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தனாவையும் குற்றவாளிகளாக பார்க்கிறது எனஅவர்அங்குமேலும்தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் லண்டன் விஜயத்தின்போது புலம்பெயர்ந்துள்ளதமிழர்களால்மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில்கலாநிதிவிக்கிரமபாகு கருணாரத்னகலந்துகொண்டதாககூறிஅவர்மீது விமான நிலையத்தில்நேற்று முன்தினம் தாக்குதல்நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ச-5)


புதிய
## நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

தரம் குன்றாத கற்பித்தலில் 23 ஆண்டுகளைக் கடந்து நவீன கற்பித்தல் முறைகளோடு உங்களுக்காக.....

கல்வியாண்டு 2011
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம் : 11-12-2010
சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு

O/L, 10, 9 எமது தனித்துவமான ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| கணிதம் | T.அற்புதராஜா |
| | S. கரண் |
| | V. கருணாகரன் |
| விஞ்ஞானம் | N. மகேந்திரன் |
| | S. சிவரூபன் |
| | S. கோபிநாத் |
| தமிழ் | A. நவநீதகிருஷ்ணன் |
| ஆங்கிலம் | K. றமணதாசன் |
| வரலாறு | A.K. றொபின்சன் |
| புவியியல் | S. கோகிலன் |
| சமயம் | A. சுமூகலிங்கம் |
| சுகாதாரம் | N. கங்காசுதன் |
| வர்த்தகம் | E. ஜீவா |

- அமைதியான பாதுகாப்பான சூழலில் கற்பித்தல்.
- மாதாந்த, நடுத்தவணை, தவணைப் பரீட்சைகள்.
- ஒவ்வொரு தவணையும் பெற்றோர், ஆசிரியர் சந்திப்பும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கலும்.

பிரிவு 1 க்கான அனுமதிகள் டிசெம்பர் 25 வரை...



A/L -2011
DAY CLASS
DMI JAFFNA
(C-1772)



## A/L Day Class
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் :10-12-2010 வெள்ளி 8.00 மணி
பல மாணவர்களின் வெற்றிக்கு வழியமைத்த முன்னணி ஆசிரியர் குழாம்...

| | |
|---|---|
| கணக்கீடு | A.P பகீதரன் |
| பொருளியல் | NB. கஜீதரன் |
| வணி.கல்வி | S. யசோ |
| தமிழ் | A.K. கீர்த்திராஜன் |
| அளவையியல் | P. கமல் |
| புவியியல் | M. செல்வா |
| இந்துநாகரீகம் | T. ஸ்ரீஸ் |
| அரசியல் | A.K. றொபின்சன் |
| வரலாறு | R.R. ஆனந்தன் |
| நாட.அரங்கி | S.R. ரமேஸ் |
| கிறிஸ்தவம் | S. நிரோஜன் |

ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
பாடம் மாறிக் கற்போருக்கு விசேட பிரிவுகள்.

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.



## NEW SCIENCE HALL & COLLEGE
## PHYSICS
2011 & Day Batch
(3204)

மின் புலம்
சனி,ஞாயிறு : 6.15 -7.15 (AM)
ஆரம்பம் : 11.12.2010

சடமும் கதிர்ப்பும்
சனி,ஞாயிறு :10.00-11.30
ஆரம்பம் : 11.12.2010

காந்தப்புலம்
திங்கள்,செவ்வாய்: 5.30 -6.30 (PM)
ஆரம்பம் : 13.12.2010

சடப் பொருட்களின் இயல்பு
வியாழன் : 3.00 -5.00 (PM)
ஆரம்பம் : 16.12.2010

Day Batch
திங்கள், செவ்வாய்:
2.30 -4.30 (PM)
ஆரம்பம் : 13.12.2010

BY: R.Kugen

PAST PAPER CLASS (2000-2010)



## புதிய வகுப்புகள் ஆரம்பம்
தரம் 4 முதல் O/L வரை
மாதாந்தப் பரீட்சைகளுடன்
தனித்துவமான ஆசிரிய சேவையுடன்
(3214)
Veenus College
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை
ஆரம்பம்:இன்று 9.12.2010 (வியாழன்) 3.00 மணி
'ஒழுக்கம், கட்டுப்பாடு உயர்ந்த கல்வி'



## Invitation
*The Choirs of Uduvil Girls' College*
*celebrate*
*christmas in song*
*On*
*Thursday, 9th December, 2010, 4.00 p.m.*
*Uduvil Girls'College Hall*
(C-1771)



## இன்று ஆரம்பம்...
ஐடியல் அக்கடமி

| சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் | இடைப்பிட்டி காரைநகர் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | அந்தோனியார் கோயிலடி மானிப்பாய் |
|---|---|---|---|

தரம் 6 முதல் O/L ,A/L வரை
இன்று (09.12.2010)
பி.ப.3.30
கல்வியாண்டு -2011
நிர்வாகியும்
கணித ஆசானும் V.N.பத்மநாதன்
(க-1750)



| சுப்ரா சித்தன்கேணி | சுப்ரா வட்டுக்கோட்டை | ஆதவன் அளவெட்டி | கிருஷ்ணா மானிப்பாய் |
|---|---|---|---|

தரம் 1 முதல் A/L வரை
"தரமான கல்வி நம்பகமான சூழல்
நம்பிக்கையான வெற்றி"
2011ம் ஆண்டுக்கான புதியபிரிவுகள்
(3205)
தொடக்கம் 10.12.2010 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org